# வானவில்

# VAANAVIL

| இதழ் 135 | பங்குனி 2022 |
|---|---|
| ISSUE 135 | MARCH 2022 |


# தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு என்ன?



இலங்கையின் பொருளாதார நெருக்கடி மிக மோசமான ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறது. அதன் விளைவாக மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. அத்துடன் பணம் வைத்திருப்பவர்கள் கூட அவற்றை வாங்க முடியாத அளவுக்கு பொருட்களுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது. இதற்குக் காரணம் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான அமெரிக்க டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுதான் எனக் கூறப்படுகிறது. (இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த டொலரின் சொந்தக்கார நாடான அமெரிக்காவே மேலதிக டொலர்களை அச்சிடுவதுதான்)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பதவியில் இருக்கும் அரசாங்கம்தான் காரணம் என எதிர்க்கட்சிகள் அரசின் மீது தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. அதேநேரத்தில் அவைகள் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மாற்று வழி எதனையும் கூறுவதாயும் இல்லை. நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அவை கூறும் ஒரேயொரு வழிமுறை உலக வட்டிக்கடைகளான உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று இலங்கை மேலும் கடன்கள் பெற வேண்டும் என்பதுதான். இந்த ஆலோசனை ஒரு நோயாளியைக் குணப்படுத்துவதற்கு உரிய மருந்துகளைக் கொடுப்பதற்குப் பதிலாக அவனுக்கு நஞ்சு கொடுப்பது போன்றது என்பதைத் தெரிந்தும் அவர்கள் இவ்வாறான ஆலோசனையைக் கூறுகிறார்கள்.

இன்னும் சிலர் தலையிடியை மாற்றுவதற்கு தலையணையை மாற்றுவது போல, சகல கட்சிகளையும் இணைத்து 'தேசிய அரசாங்கம்' ஒன்றை அமைத்தால் பிரச்சினைகள் எல்லாம் தானாகத் தீர்ந்து விடும் என ஆலோசனை கூறுகின்றனர்.

ஆனால் இந்தப் பிரச்சினையை சற்று நுணுகி ஆராய்ந்து பார்க்க வேண்டும். தற்போதைய பொருளாதார நெருக்கடி இலங்கையில் மட்டும் பிரத்தியேகமாக உருவாகியதா என்பதை முதலில் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் இல்லை என்பதே அதற்கான பதில்.

இந்த நெருக்கடி உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. இது இரு வருடங்களுக்கு முன்னர் கொவிட் - 19 என்ற பெரும் தொற்று வியாதி உருவான போதே உலக நாடுகள் எல்லாவற்றிலும் வேகமெடுக்க ஆரம்பித்துவிட்டது. அதன் பின்னர், ரஸ்யா உக்ரேன் மீது படையெடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் முழு அளவிலான போராக மாறி, அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ரஸ்யா மீது பல பொருளாதாரத் தடைகளை விதித்த பின்னர் மோசமான நிலையை எட்டியுள்ளது.

ஆனால் மேற்கு நாடுகளின் பொருளாதாரத் தடையால் அவை தங்களைத் தாங்களே தற்போதைய பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்டுக் கொண்டுள்ளனவா என்றால் அதுவும் இல்லை. தற்பொழுது வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகளில் கூட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சுமார் 30 சத வீதம் வரை அதிகரித்துள்ளன. ஆனால் அதைச் சமாளிக்கும் வகையில் அந்த நாடுகளில் பணி புரிபவர்களின் சம்பளம் ஒரு சதம் தன்னும் கூடவில்லை. அது மாத்திரமின்றி, அந்த நாடுகள் மக்களுக்கு வழங்கி வந்த பல நிவாரணங்களிலும் – குறிப்பாக மருத்துவம், கல்வி, பொதுப் போக்குவரத்து என்பனவற்றில் குறைப்பும் செய்து வருகின்றன.

மேற்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வுக்கு ஒரு சிறிய உதாரணத்தைக் கூறலாம். கடந்த வருடம் வரை கனடாவில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை சராசரியாக ஒரு டொலராகவே இருந்து வந்தது. அது இப்பொழுது ஏறத்தாழ இருமடங்காகி 1 டொலர் 80 சதமாக உயர்வடைந்திருக்கிறது. அது மட்டுமின்றி, தினசரி அதன் விலை அதிகரித்த வண்ணமும் உள்ளது. இத்தனைக்கும் ரஸ்யா மீது பொருளாதாரத் தடை விதித்த செல்வந்த

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# உக்ரைனில் நேட்டோவின் பினாமி யுத்தம்

கடந்த வானவில் இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் 'ஐரோப்பாவில் யுத்தத்தைத் திணிக்கும் நேட்டோ' என்ற தலைப்பில் ரஷ்யா – உக்ரைன் யுத்த நெருக்கடி பற்றி சுருக்கமாக விபரித்திருந்தோம். ஐரோப்பாவில் மீண்டுமொரு யுத்தம் தோன்றுவது என்பது பேரழிவிற்கே வழிவகுக்கும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே அந்தத் தலையங்கம் எழுதப்பட்டது.

உக்ரைன் நேட்டோவில் இணைக்கப்படக் கூடாது, டொன்பாஸ் மற்றும் டொனெஸ்க் மக்ககளுக்கு எதிராக உக்ரைனில் இயங்கும் அமெரிக்க – நேட்டோ – ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவிலான இராணுவக் கட்டமைப்பு நிறுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளுடனும், ஜெர்மனி, பிரான்ஸ் முன்னிலையில் உக்ரைன் ரஷ்யாவுடன் செய்துகொண்ட மின்ஸ்க் (Minsk) உடன்படிக்கைக்கு இணங்குமாறும் ரஷ்யா உக்ரைனை வலியுறுத்தியது. இந்த கோரிக்கைகள் அனைத்தும் ரஷ்யாவின் பாதுகாப்புக்கான 'சிவப்புக் கோடுகள்' (Red lines) என்று ரஷ்யா தொடர்ந்து சொல்லி வந்தது. அவை மீறப்பட்டால் அதற்கான பதிலையளிக்க நேரிடுமென நேட்டோ நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ரஷ்யா எச்சரித்தது. எனினும் உக்ரைனும் அமெரிக்க மேலாதிக்க நேட்டோவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து சிவப்புக் கோடுகளை மீறி நடந்து வந்துள்ளன.

மேலும் உக்ரைன் உட்பட மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா – நேட்டோ நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள், ஒரு தீவிர அச்சுறுத்தலாக ரஷ்யா உணர்ந்தது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். முடிந்தவரையில் இராணுவ மோதலைத் தவிர்ப்பதற்காக ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ் என பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி தனது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தியது.

சகல சமாதான முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில், பெப்ரவரி 24ம் திகதி இராணுவமயமாக்கல் மற்றும் நாஸிமயமாக்கல் போன்றவற்றிலிருந்து உக்ரைனை விடுவிப்பதற்காக (demilitarization, denazification), ரஷ்யா விசேட இராணுவ நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்துள்ளது. போர் ஆரம்பித்த பின்னரும் ரஷ்யாவும் உக்ரைனும் பல சுற்றுப்பேச்சுவார்ததைகள் நடத்தியுள்ளனர். அத்துடன் இஸ்ரேல், துருக்கி போன்ற நாடுகளும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் எந்தத் தரப்பினராலும் இதுவரையில் போரை நிறுத்த முடியவில்லை.

ரஷ்யா உக்ரைன் மீது தொடுத்துள்ள இரரணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, யப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிற்கு எதிராகப் பாரிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. மேலும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உட்பட ஏராளமான ரஷ்ய அரசுப்பிரநிதிகள் தங்கள் நாட்டிற்கு பயணம் செய்ய முடியாதவகையில் பயணத்தடைகளையும் அறிவித்துள்ளன. ரஷ்யாவின் வங்கிகளுடான சகல சர்வதேசத் தொடர்புகளையும் துண்டித்து வெளிநாட்டு வங்கிகளிலிருந்த 500 பில்லியன் டொலருக்கு அதிகமான ரஷ்யப்பணம் முடக்கப்பட்டுள்ளது. மேலும் சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா போன்ற நாடுகளை உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரைக் கண்டிக்குமாறு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகின்றது.

ரஷ்யா உலகில் எரிவாயு உற்பத்தியில் இரண்டாமிடத்தையும் கச்சா எண்ணெய் உற்பத்தியில் மூன்றாமிடத்தையும் வகிக்கின்றது. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையால் எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய்யின் விலைகள் உலகச்சந்தையில் முன்னெப்போதுமே இல்லாத வகையில் உயர்ந்துள்ளன. இதனால் தடைவிதித்துள்ள நாடுகளின் மக்கள் உட்பட உலகெங்கிலுமுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைன் நேட்டோவில் இணையக்கூடாது, அத்தோடு ரஷ்ய இனத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிரீமியா ரஷ்யாவுடன் இணைந்ததையும், டொன்பாஸ் மற்றும் டொனெஸ்க் பிராந்தியங்களின் குடியரசுப் பிரகடனங்களை உக்ரைன் அங்கீகரிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை உக்ரைன் நிறைவேற்றினால் போரை உடனடியாக நிறுத்துவதாக ரஷ்யா திரும்பத்திரும்பக் கூறிவருகின்றது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையானது, பெரும்பாலான நேட்டோ நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கு இடையிலான மோதலாக வளர்ந்துள்ளது என்பது இப்போது வெளிப்படையாகத் தெரிகின்றது. அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இதுவரையில் உக்ரைனுக்கு 10 பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவத் தளவாடங்களை வழங்கியுள்ளது. மேலும் பல பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவத் தளவாடங்களை வழங்கத் தயாராகியும் வருகிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால் ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைன் மூலம் இவர்கள் ஒரு பினாமி யுத்தத்தையே நடத்துகிறார்கள்.

உக்ரைன் தேசத்தின் தற்போதைய எல்லைகள் 1917 வரை உருவாகவில்லை. அத்துடன் 1922 இல் சோவியத் ஒன்றியத்தின் அங்கத்தினாராவதற்கு முன்னதாக, ஒட்டோமான் பேரரசு, ரஷ்யாவின் ஜார் பேரரசு மற்றும் போலந்து உட்பட பல்வேறு சக்திகளால் ஆளப்பட்ட ஒரு துண்டு துண்டான பகுதிகளாகவே அது இருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே, அப்போது போலந்தின் ஒரு பகுதியாக இருந்த நிலப்பகுதிகளை உள்ளடக்கி. கொஞ்சம் ஒன்றுபட்டதாக உக்ரைன் உருவெடுத்தது. சோவியத் ஒன்றியம் உருவானபோது, லெனின் தலைமையிலான போல்ஷவிக்குகள், முன்னர் ஜார் ரஷ்யப் பேரரசின் பகுதிகளாக இருந்த சிறுபான்மைத் தேசிய இனப்பிரதேசங்களுக்கு சுயாட்சியை வழங்குவதற்கு முன்மொழிந்தனர். இது அவர்களின் சொந்த மொழி, கலாச்சாரம் மற்றும் பிரிந்து செல்லும் உரிமையை தக்க வைத்துக்கொள்ள அனுமதித்தது. இந்தச் சமரசம், கம்யூனிசத்திற்கான தொழிலாள வர்க்க ஐக்கியம் என்ற கோட்பாட்டிற்குப் பதிலாக தேசியவாதத்தை முன்னோக்கித் தள்ளியது எனலாம். இதுவே ஒரு கம்யூனிச சமூகத்தை அடையத் தவறியதற்கும், சோவியத் ஒன்றியத்தின் கலைப்பை ஊக்குவிப்பதற்கும் பங்களித்தன என்ற குற்றச்சாட்டு இப்போதும் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

உக்ரைனில் நாளுக்கு நாள் பல மனித உயிர்கள் மற்றும் கட்டமைப்புகள் அழிந்து கொண்டிருக்கின்றன. பத்து மில்லியன் மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.. அமெரிக்கா – நேட்டோ நாடுகளின் கைப்பொம்மையான உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ரஷ்யாவின் சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ரஷ்யாவுடன் பேசத்தயார் என்று கூறுகிறார். பின்னர், உக்ரைனுக்கு மேலும், மேலும் இராணுவ உதவி செய்யுமாறும் எல்லோரிடமும் கெஞ்சுகிறார். உக்ரைனின் இன்றைய நிலைமைக்கு இவரும் அமெரிக்காவுமே முழுப்பொறுப்பாளிகள். இதுவும் போதாதென்று தற்போது அமெரிக்கா சீனாவையும் மிரட்டி வருகின்றது. இது இன்னுமொரு உலக யுத்தத்தை நோக்கி உலகம் பயணித்துக் கொண்டிருக்கின்றதா என்ற அச்சத்தையே தோற்றுவித்த வண்ணமுள்ளது.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# சீன - இலங்கை உறவுகளில் எந்த முடிச்சுகளும் இல்லை!
## -சீனாவுக்கான இலங்கைத் தூதுவர்

(சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் பாலித ஹோககன்ன (Dr. Palitha Kohona) கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையின் மஞ்சுளா பெர்னான்டோவுக்கு வழங்கிய பேட்டியின் முக்கியமான பகுதிகள்)

**கேள்வி:** இந்த ஆண்டு இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 65 ஆவது ஆண்டு நிறைவையும், இரு நாடுகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட இறப்பர் – அரிசி ஒப்பந்தத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கிறது. சீனாவுடனான எமது தனித்துவமான, முக்கியத்துவம் வாய்ந்த உறவுகள் என்ன?

**பதில்:** சீனாவுடனான உறவைப் பற்றி விளக்கும் போது, தனித்துவம் பற்றி கருத்துக் கூறப் போவதில்லை. இந்த உறவு மிகவும் பலமானது எனக் கூறுவேன். அத்துடன் இது பலமான அத்திபாரத்தில் கட்டப்பட்டுள்ளது.

சீனாவுடனான இலங்கையின் உறவுகள் 2,000 ஆண்டுகள் பழமையானது. கடந்த காலங்களில் வணிகர்கள், கடலோடிகள், பிக்குகள், ஆகியோர் சீனாவிலிருந்து இலங்கை வந்துள்ளதுடன், இலங்கையிலிருந்து பிக்குகள், பிக்குணிகள், இளவரசர்கள் மற்றும் வணிகர்கள் கடல் கடந்து சீனாவுக்குச் சென்றுள்ளனர். பிரபல கடலோடியான அட்மிரல் ஸெங் (Admiral Zheng) இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் தனது விஜயத்தின் நினைவாக காலியில் கல்வெட்டொன்றை விட்டுச் சென்றுள்ளார். அதற்கு மிகவும் முன்னதாக சீனப் பிக்குவான ஃபா–ஹியன் (Fa-hsien) இலங்கைக்கு வந்து அனுராதபுரத்தில் இரு வருடங்கள் வாழ்ந்திருக்கிறார். இலங்கையில் அவருடைய அனுபவங்கள் பற்றிய ஏராளமான குறிப்புகள் அந்தக் காலத்துச் சமூகம் பற்றி நாம் விளங்கிக் கொள்வதற்கு உறுதுணை புரிகின்றன.

1950 இல் சீனாவை அங்கீகரித்த முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். 1957 பெப்ருவரியில் இரு நாடுகளுக்குமிடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1952 இல் சீனா மீது மேற்கு நாடுகள்



Dr. Palitha Kohona

பொருளாதாரத் தடை விதித்தபோது அரிசிக்குப் பதிலாக இறப்பரை சீனாவுக்கு விற்பனை செய்வதற்கு நாம் இணங்கினோம். அந்த நேரத்தில் சீனாவைப் போலவே நாமும் ஐக்கிய நாடுகளின் ஒரு அங்கத்தவராக இருக்கவில்லை.

நாங்கள் ஒரு பயங்கரவாதக் குழுவுக்கு எதிராகக் கடுமையாகப் போராடிய போது சீனா எங்களுக்குப் பெரிய அளவில் உதவியது. சொல்லப்போனால் சீனாவின் உதவியின்றி 2009 இல் பயங்கரவாத அச்சுறுத்தலை எம்மால் தோற்கடித்திருக்க முடியாது. அதன் உதவி பெரும்பாலும் கனரக இராணுவ தளபாடங்களாகவே இருந்தன.

அதன் பின்னர் நாங்கள் யுத்தத்திற்குப் பிந்திய பொருளாதார வளர்ச்சியை வேகமாக முன்னெடுக்க முனைந்த போது, எமக்குத் தேவையான உதவிகளை எமது பாரம்பரிய நண்பர்கள் எவரும் செய்ய முன் வரவில்லை. சீனாதான் நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் உட்பட பாரிய உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்ய உதவியது.

மிகவும் சமீபத்தில் பெருந்தொற்று நோய் எம்மைத் தாக்கிய பொழுது, சீனா 27 மில்லியன் 'சைனோபாம்' தடுப்பூசிகளைத் (Sinopharm vaccine) தந்துவியது. இவற்றில் மூன்று மில்லியன் தடுப்பூசிகள் நன்கொடையாகும். சீனாவின் இந்தப் பெரிய உதவி இல்லையெனின் இலங்கையால் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தியிருக்க முடியாது. இப்பொழுது 72 சத வீதத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டு விட்டனர்.

சீனா உலகில் உலகில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக பெரும் பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சீனா 2028 இல் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாக மாறிவிடும் என உலக வங்கி கணிப்பிட்டுள்ளது. அத்துடன் அது, இன்றைய உலகில் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டைக் (Foreign Direct Invesment – FDI) கொண்ட நாடாகவும் திகழ்கிறது. அமெரிக்காவுக்கு அண்மித்ததாக சீனாவிலிருந்து வருடந்தோறும் 150 பில்லியன் டொலர்கள் FDI மூலம் பெருகுகிறது. அதேபோல, சீனா கடந்த வருடம் அமெரிக்காவைத் தாண்டிச் சென்று உலக ரீதியாக FDI யை கவர்ந்திருக்கும் காந்தமாகத் திகழ்கிறது.

பெருந்தொற்றுக்கு மத்தியிலும் சீனா மிகப்பெரும் சுற்றுலா வளமுள்ள நாடாக இருக்கின்றது. 169 மில்லின்களுக்கு மேற்பட்ட சீனர்கள் ஒவ்வொரு வருடமும் மற்றைய நாடுகளுக்குச் சென்று வருகின்றனர். அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சீனா எமது பிராந்தியத்தில் மிகவும் பிரதான செயற்பாட்டாளர் என்பதை இலங்கை அரசாங்கம் உணர்ந்துள்ளது. எங்கள் இரண்டு நாட்டுத் தலைவர்களும் அண்மைக்காலத்தில் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டுள்ளனர். சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் ஃபெங்கீ (Wei Fenghe) கடந்த வருடமும், வெளிவிவகார அமைச்சர் வாங் யீ (Wang Yi) இந்த மாதமும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

**கேள்வி:** இலங்கை போன்ற சிறிய நாடு சீனாவின் இராஜதந்திர ஆதிக்கத்துடன் நிற்பது அவர்களுக்கு நாம் முக்கியம் என்பதாலா அல்லது எமக்கு அவர்கள் முக்கியம் என்பதாலா?

**பதில்:** இலங்கையின் இராஜதந்திரத்துக்கு உள்ள சவால் சீனாவுக்கு இலங்கையை

முக்கியமானதாக ஆக்கியுள்ளது. அது இப்பொழுது அளவிட முடியாத வளங்களுடன் கூடிய ஒரு நவீனமான நாடு. ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி இலங்கை பற்றி சீன ஊடகங்களில் முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது. கடந்த சில மாதங்களாக சீனாவிலுள்ள தூதராலயக் குழு சீனா பற்றி வெற்றிகரமான விழிப்புணர்வு இயக்கத்தை மேற்கொண்டதற்கு அதுதான் காரணம். இலங்கை பற்றிய விவரணத்தை திரைப்படத் தயாரிப்பாளர்கள் மூலம் நாம் ஊக்கப்படுத்தியுள்ளோம். தொலைக்காட்சி மூலம் நான் எமது நாடு பற்றி தெரியப்படுத்தியுள்ளேன். நான் சீனாவின் 14 மாகாணங்களுக்கு பயணம் மேற்கொண்டு அந்த மாகாணங்களின் ஆளுநர்கள், பிரதி ஆளுநர்கள், மாநகர முதல்வர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி இலங்கையைப் பிரசித்தப்படுத்தியுள்ளேன்.

**கேள்வி:** இலங்கை சீன சுற்றுலாப் பயணிகளுக்கு விருப்பமான இடமாக உள்ளதா?

**பதில்:** நான் சீனாவுக்கு வந்த பின்னர் சீன மக்கள் மத்தியில் இலங்கை பற்றிய புரிதல் மிகவும் குறைவாக இருப்பதைக் கண்டேன். 2019 இல் தாய்லாந்துக்கு 26 மில்லியன் சீன சுற்றுலா பயணிகளும், சிங்கப்பூருக்கு 4.5 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவுக்கு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளும் சென்ற அதேநேரத்தில் இலங்கைக்கு 265,000 சீன சுற்றுலா பயணிகளே 2018 இல் வருகை தந்தனர்.

**கேள்வி:** 2022 இல் என்ன மாதிரியான இரு தரப்பு முதலீட்டு மற்றும் சுற்றுலாத்துறைத் திட்டங்கள் உள்ளன?

**பதில்:** நாங்கள் கொழும்பு துறைமுக நகரம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகில் உள்ள கைத்தொழில் முயற்சி வலயத்தில் உள்ள உற்பத்தி – இணைப்புச் செய்தல் முயற்சிகள் என்பனவற்றில் மட்டுமின்றி, தூர இடங்களுக்கான கப்பல் மூலமான ஏற்றுமதி போன்ற துறைகளில் முதலீடு செய்வது சம்பந்தமாக நாம் பல சீன நிறுவனங்களுடன் பேசியுள்ளோம். அதற்கு அங்கே கணிசமான ஆர்வம் உள்ளது. இந்து சமுத்திரத்தில் எமது இடம் ஒரு பிரதான கவர்ந்திழுக்கும் இடமாக இருக்கின்ற போதிலும், நாம் இந்தத் துறையில் இன்னும் கூடுதலாக வேலை செய்ய வேண்டும். எங்கள் மக்களின் உயர்மட்டக் கல்வித்தரம், சாதகமான வரி அமைப்புகள் என்பனவற்றில் அரசாங்கம் விழிப்புணர்வை ஏற்படுத்தினால், அதன் மூலம் கூடுதலான வெளிநாட்டு நேரடி முதலீட்டுச் சூழலை உருவாக்க முடியும்.

எமது வெற்றிகரமான பிரச்சாரத்தின் பயனாக இலங்கைக்கு வருபவர்களின் தொகை மகிழ்வூட்டக்கூடிய வகையில் அதிகரித்துள்ளது. இரண்டு வருட பெருந்தொற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக, இந்தக் கட்டத்தில் சீனர்கள் பிரயாணம் செய்வது பின்னடைவைச் சந்தித்துள்ளது. எமது இலட்சியம், இலங்கையை அவர்களது உயர்ந்த நிகழ்ச்சி நிரலில் வைத்து எமது நாட்டுக்கு வருகை புரிய வைப்பதே. பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதும், இலங்கையை முன்னுரிமையான பயண இலக்குகளில் ஒன்றாக வைக்கும்படி நாம் சீன அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறோம்.

நாங்கள் Caissa, China International Travel Services, Shanghai Travel Bureau போன்ற முதல்தரமான சீன பயண அமைப்புகளுடன் பேசியிருக்கிறோம். இவைகள் பல மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டு செயல்படுபவை. இலங்கைக்கு வருடாந்தம் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளை தம்மால் அனுப்பி வைக்க முடியும் என அவர்கள் எம்மிடம் உறுதியளித்துள்ளனர்.

**கேள்வி:** அதுதான் எமது இலக்கா?

**பதில்:** எமது இலக்கு அதையும் விட அதிகமானது. தாய்லாந்து கூடுதலானவர்களைப் பெற முடியுமாக இருந்தால், எம்மாலும் முடியும். ஆனால், இதுதான் எமது உடனடி இலக்கு. நாங்கள் கூடுதலான சீன மொழி பேசும் சுற்றுலா வழிகாட்டிகளைப் பயிற்றுவிக்க வேண்டும். சாதாரணமான சீனர்கள் ஆங்கிலத்தைப் பற்றி அக்கறைப்படுவதில்லை. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றி தெரிந்த சுற்றுலா வழிகாட்டிகள் எமக்குத் தேவை. கடற்கரைகளில் ஓய்வெடுக்கும் ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளை விட சீனர்கள் வித்தியாசமானவர்கள். சீனர்கள் தாம் பயணம் மேற்கொள்ளும் இடங்கள் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள். அதற்கேற்ற வகையில் செயல்படும் தேவை எமக்குள்ளது. விருந்தோம்பும் கலை கூடுதலான சீன சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும்.

**கேள்வி:** பெருந்தொற்றுக்குப் பிந்தைய பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்குவதில் இலங்கை இந்தியாவுடனும் சீனாவுடனும் சம நிலையைப் பேணும் என சில அவதானிகள் கூறுகிறார்களே?

**பதில்:** இதை ஒரு சமநிலை நடவடிக்கை என நான் அழைக்கமாட்டேன். இந்தியா ஆயிரக்கணக்கான வருடங்களாக எமது பழைய நண்பர். எமது மூதாதையர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். எமது மதம், கலாச்சாரம் என்பன பெருமளவு இந்தியாவிலிருந்து வந்தவை. இந்தியாவுடன் ஆக்கபூர்வமாகப் பணியாற்றுவது அவசியமானது. இந்தியாவின் தேவைகளையும் அக்கறைகளையும் பற்றி உணர்வுபூர்வமாக இருக்க வேண்டிய தேவை எமக்குள்ளது. இது எமக்குத் தேதவைப்படும் போது உதவிகளைக் கொண்டு வரும்.

நான் முன்னர் குறிப்பிட்டது போல, சீனாவுடன் எமக்கு நீண்டகால நட்புணர்வுண்டு. நாம் பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் போதும், பின்னர் யுத்தத்துக்குப் பிந்தைய அபிவிருத்தியின் போதும், இப்பொழுது ஆட்கொல்லியான பெருந்தொற்றை எதிர்நோக்கிய போதும், நாம் சீனாவை நாடினோம். சீனா எமக்கு உதவத் தயாராக இருந்தது. இதை ஒரு சமநிலை நடவடிக்கை என அர்த்தப்படுத்த முடியாது என நான் கருதுகிறேன். இரு தரப்பு உறவுகள் என்பது, வெறுமனே சுய இலாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. நட்புறவுகள் அவர்களது சொந்த விருதுகளைக் கொண்டவை.

**கேள்வி:** சீனாவுடன் இணைந்து ஏதாவது புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் நோக்கம் உண்டா?

**பதில்:** விரைவில் கொழும்பில் பல உயரமான கட்டிடங்கள் கட்டும் திட்டம் – குறிப்பாக குடியிருப்புத் தேவைகளுக்காக – உண்டு. அவை அபிவிருத்தித் திட்டங்கள் அல்ல. முதலீட்டாளர்கள் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் இந்தத் திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தயாராக உள்ளனர். ஆனால் கொழும்பிலிருந்து அங்கீகாரம் இறுதி செய்யப்படவில்லை. ஹம்பாந்தோட்டையில் ஒரு பெரிய சீன உருக்காலை நிறுவனம் ஒரு

தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் மீள்சுழற்சி முறையிலான மின்சாரத் திட்டங்களில் ஈடுபடுவதற்கு பல சீன தனியார் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இந்தத் திட்டங்களை முன்னரே நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்றைய மின்வெட்டுப் பிரச்சினை எழுந்திருக்காது. நாம் முழுவதுமாக மீள் சுழற்சி மின்சாரத்தை நோக்கி இருப்பதால் நாம் அதை அவர்களிடம் இருந்து பெற வேண்டும். 2030 இல் எமது 70 வீதமான மின்சாரம் மீள் சுழற்சி முறையிலேயே பெறப்படும். 2060 இல் நாம் கரியமிலவாயு அற்றவர்களாக இருப்போம். இலங்கை அதில் ஈடுபட்டுள்ளது. நாம் அந்தப் பாதையில் செல்ல வேண்டிய தேவையுள்ளது.

**கேள்வி:** காலியில் 100 ஏக்கர் பரப்பளவில் ஒரு துறைமுக நகரம் நிர்மாணிக்கப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு சீனா நிதயுதவி அளிக்கிறதா?

**பதில்:** இந்தத் திட்டத்தின் விபரங்கள் குறித்து இதுவரை தெரிய வரவில்லை. இது இன்னமும் திட்டமிடுதல் நிலையிலேயே உள்ளது. இது ஒரு துறைமுக நகரமல்ல. இது பயணிகள் கப்பல்களுக்கான (Cruise Liners) ஒரு துறைமுக தரிப்பிடமாகும். இந்தக் கட்டத்தில் எந்தவொரு சீன நிறுவனமும் இதில் சம்பந்தப்பட்டதாக நான் அறியவில்லை.

**கேள்வி:** இன்றைய கொவிட் – 19 பெருந்தொற்றுச் சூழலில் அமெரிக்க டொலர் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்துக்கு சீனா பிராணவாயு அளிக்கின்றது. ஆனால் இந்தக் கடன்கள் மூலம் சீன உற்பத்திகளை மட்டுமே கொள்வனவு செய்ய முடியும் என விமர்சகர்கள் கூறுகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** எந்தவொரு நாடும் மூன்றாவது தரப்பின் பொருளாதாரம் வளர்வதற்கு கடன்களை வழங்காது. இதுதான் இன்றைய உலகின் யதார்த்தம். எல்லா இடங்களிலும் இதுதான் பின்பற்றப்படுகிறது. இது ஒரு சிறுபிள்ளைத்தனமான கருத்து.

**கேள்வி:** சீனா 'உலக வல்லரசாக' வருவதற்கு மற்றைய வல்லரசுகளுடன் மேலாதிக்கப் போட்டியில் ஈடுபட்டுள்ளது. அப்படியானால் நாம் தேவையில்லாமல் சீனாவுடன் நெருக்கமாகச் சென்று சிக்கலில் மாட்டிக் கொள்கிறோமா?

**பதில்:** சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் உள்ள நாடு. இது உலகில் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு வளமுள்ள நாடு. இதுதான் உலகின் மிகப்பெரிய நுகர்வுச் சந்தையைக் கொண்டுள்ள நாடு. மேற்கில் உள்ள வளர்ந்த நாடுகள் உட்பட ஒவ்வொரு நாடும் சீனச் சந்தையைப் பெற விரும்புகின்றன.

அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் சீனாவில் உள்ள நேரடி வெளிநாட்டு முதலீட்டு வசதி மிகப்பெரும் இடமாக உள்ளது. சீனாவின் நேரடி அந்நிய முதலீட்டில் அமெரிக்கா பங்குபற்றுவது குறித்து யாராவது விமர்சிக்கிறார்களா? அதேபோல, சீனா நேரடி அந்திய முதலீட்டின் மிகப்பெரிய வரவேற்பாளராக இருக்கிறது. ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுகளின் பொருட்களுக்கு சீனா மிகப்பெரிய சந்தையாக இருக்கிறது. அதேநேரத்தில், சீனாவின் 51 வீதமான விவசாய இறக்குமதிப் பொருட்கள் அமெரிக்காவிலிருந்துதான் வருகின்றன. இதுதான் யதார்த்தம். சீனச் சந்தையைப் பெறுவதற்கு முதலாம் உலக நாடுகள் ஒருவரோடு ஒருவர் போடடிப் போடுகின்றனர்.

இந்த விமர்சகர்கள் நாட்டின் சிறந்த நன்மைகளை மனதில் கொள்வதில்லை. அவர்கள் ஒரு வழி, ஒரு தடம் (Belt and Road) முயற்சி பற்றியும் விமர்சிக்கிறார்கள். இந்த முயற்சியில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணம் அடிப்படையில் இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு நன்மை பயப்பவை. நேரடி வெளிநாட்டு முதலீட்டு முன்னேற்றத்தால் பல ஆபிரிக்க நாடுகளும், வியட்நாம், லாவோஸ் போன்ற தென் கிழக்காசிய நாடுகளும் பயன் பெற்றுள்ளன.

எமது நாடு சீன அல்லது வேறெந்த அரசாங்கங்களுடனோ சில நன்மைகள் பெறுவதற்காக பேரம் பேசும்போது எமது சுதந்திரம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு என்பன பற்றிய விழிப்புணர்வுடன் இருப்பது தேவை. பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து எமது இறைமையைப் பாதுகாப்பதற்காக எமது 21,000 இளம் ஆண்களும், பெண்களும் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். மிகப் பெருந்தொகையானோர் அங்கங்களை இழந்துள்ளனர்.

**கேள்வி:** இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகச் சமமின்மையைக் குறைப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் மிகப்பெரும் வர்த்தகச் சமமின்மை நிலவுகின்றது. சீனா இலங்கைக்கு 4 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. நாம் 232 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களைத்தான் சீனாவுக்கு ஏற்றுமதி செய்கிறோம். எமது தூதரகம் உலகின் மிகப்பெரிய நுகர்வுச் சந்தையான சீனச் சந்தையில் கூடுதலான பங்கு வகிக்கக்கூடிய வழிவகைகளை ஆராயுமாறு ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் (Export Development Board) கேட்டுள்ளது.

நாங்கள் காய்கறிகள், தெங்குப் பொருட்கள், தேயிலை, இரத்தினக்கல், ஆபரணங்கள், கைவினைப் பொருட்கள் என பெரும்பாலானவற்றை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். இரண்டு வாரங்களுக்கு முன்னர் எமது தூதரகம் இலங்கையின் நீல நிற இரத்தினக் கற்கள் (Saphire) சம்பந்தமான கண்காட்சி ஒன்றை நடத்தியது. கவலை என்னவென்றால், அந்த எல்லா நீல நிற இரத்தினக் கற்களும் சீன நிறுவனமொன்றுக்குச் சொந்தமானவை.

# எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்காது இந்தியா இலங்கைக்கு கடன் வழங்கியுள்ளது

இலங்கை அரசாங்கம் மக்களுக்காக அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உணவுகளை கொள்வனவு செய்வதற்காக இந்தியா, ஒரு பில்லியன் டொலர் கடனுதவியை வழங்கியுள்ளது. குறிப்பாக தமிழ், சிங்கள புத்தாண்டை கருத்தில் கொண்டு, மாரச் 17ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இக்கடன் உதவி கிடைத்துள்ளதாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்தியா எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லையென தெரிவித்துள்ள நிதியமைச்சர், மூன்று வருட தவணை முறையில் இலங்கை இதனைத் திருப்பி செலுத்தவேண்டுமென கூறியுள்ளார்.

'பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த கடனுதவி போதுமானதா?' என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், மக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சமூகத்தினர் அனைவரும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒன்றுபடவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# பேராசிரியர் இஸ்மாயில்: ‘இயற்கை விவசாயம் பற்றி தெளிவு வந்துள்ளது என்கிறார் இலங்கை அமைச்சர்!’

**மண்புழு விஞ்ஞானியும் தமிழ் நாட்டின் மாநில வளர்ச்சி கொள்கை குழுவின் பகுதிநேர உறுப்பினரும் பேராசிரியருமான சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், இலங்கையின் இயற்கை விவசாயிகளுக்கான அமைப்பான ‘லோம்’** (LOAM - Lanka Organic Agricultural Movement) **அழைப்பின் பேரில் இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறார்.**

**தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் விகடன் இதழைச் சேர்ந்த ஆ.சாந்தி கணேஷ் பேராசிரியரிடம் உரையாடியதைச் சுருக்கமாக கீழே தரப்படுகின்றது.**

**இ**லங்கையில் நூறு சதவிகிதம் இயற்கை விவசாயம் செய்வது என்கிற முடிவை அந்நாட்டு அரசு எடுத்தது அனைவரும் அறிந்ததுதான். இதனால் பொருளாதாரம் சரியும் என இலங்கையின் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் இரசாயன உரத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் போராட்டம் நடத்தியதால், ‘நூறு சதவிகித இயற்கை விவசாயம்’ என்கிற முடிவை திரும்பப் பெற்றுக் கொண்டது இலங்கை அரசு.

இந்நிலையில், மண்புழு விஞ்ஞானியும் தமிழ் நாட்டின் மாநில வளர்ச்சி கொள்கை குழுவின் பகுதிநேர உறுப்பினரும் பேராசிரியருமான சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், இலங்கையின் இயற்கை விவசாயிகளுக்கான அமைப்பான ‘லோம்’ அழைப்பின் பேரில் இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறார். அவரிடம் பேசினோம்.

“ஜெர்மனியைச் சேர்ந்த இயற்கை விவசாய ஆர்வலரான பீட்டர் என்பவர், இயற்கை விவசாயம் தொடர்பான புராஜெக்ட்டாக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தியா வந்திருந்தபோது என்னையும் சந்தித்து இயற்கை விவசாயம் குறித்து உரையாடினார். அதன் பிறகு, இலங்கை சென்ற அவர், ‘லோம்’ அமைப்பிடம் ‘என்னை இலங்கைக்கு அழைத்து இயற்கை விவசாயம் தொடர்பான உரைகளை நிகழ்த்த வைக்க வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து நான் இலங்கைக்குப் பயணமானேன். இது என் தனிப்பட்ட பயணம்” என்றவர், இலங்கையில் தான் உரையாற்றிய இடங்கள், அவற்றின் பலன்கள் குறித்துப் பேச ஆரம்பித்தார்.



**பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில்**

“முதலில் பலதுறைகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் என்.ஜி.ஓ(NGO)–க்கள் முன்னிலையில் ‘லோமில்’தான் இயற்கை விவசாயம் தொடர்பாக உரையாற்றினேன். ‘லோம்’(LOAM) என்றால் ‘நல்ல தோட்டத்து மண்’ என்று அர்த்தம். அடுத்து கொழும்பில், அந்நாட்டின் வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்களுடன் இயற்கை விவசாயம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டேன். அங்கு கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் இயற்கை வேளாண்மை பற்றி நான் நிகழ்த்திய உரையைக் கேட்ட அப்போதைய இலங்கை வேளாண்துறை ராஜங்க அமைச்சர் ஷஷிரேந்திர ராஜபக்ஷே (Shasheendra Rajapaksa), ‘இப்போதுதான் இயற்கை விவசாயம் தொடர்பான தெளிவு வந்திருக்கிறது. வருங்காலத்தில் உங்களுடைய உதவி எங்களுக்குத் தேவைப்படும்’ என்றார். இதைத் தொடர்ந்து பெரதேனியா பல்கலைக்கழகத்தின் (University of Peradeniya) பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் விவசாயம் குறித்து உரையாற்றினேன்.

அடுத்து வவுனியாவில் இருக்கிற தமிழ் மக்கள், விவசாயத்துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில் உரையாற்றினேன். கிளிநொச்சியிலும் இதுவே தொடர்ந்தது. கொழும்பு நகரைச் சேர்ந்த இயற்கை ஆர்வலர்களுக்கு ‘ஒன்லைனில் லெக்சர்’ (Online Lecture) கொடுத்தேன். இலங்கையில் நான் ஆற்றிய அத்தனை உரைகளிலும் கலந்துரையாடல்களிலும் இயற்கை விவசாயம் எப்படிச் செய்வது, நாட்டு விதைகளை எப்படிச் சேகரிப்பது தற்சார்பு முறையில் மக்கள் எப்படி வாழ்வது என்பனவற்றுக்கான வழிமுறைகளையே எடுத்துரைத்தேன். குறிப்பாக, எந்தவித முன்னேற்பாடுகளும் இல்லாமல் திடீரென இயற்கை விவசாயம் மட்டுமே செய்வது என முடிவெடுத்தால், உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு வரும் என்பது பற்றிய கருத்துகளையே அதிகம் எடுத்துரைத்தேன். அதை இலங்கையின் வேளாண்மைத்துறை அமைச்சரில் ஆரம்பித்து வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் வரை நன்கு உள்வாங்கிக் கொண்டார்கள். இலங்கையில் நான் கண்ட பல நல்ல விஷயங்களில் ஒன்று, மக்களில் ஆரம்பித்து அதிகாரிகள் அமைச்சர்கள் என அனைவருமே இயற்கை விவசாயத்திலும் தற்சார்பு வாழ்க்கையிலும் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அதற்கேற்றபடி நீர்நிலைகளைச் சுத்தமாகப் பராமரிக்கிறார்கள்” என்றவர், இயற்கை விவசாயம் தொடர்பான தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் குறித்தும் பகிர்ந்து கொண்டார்.

“அடுத்த 20 வருடங்களில் தமிழ்நாடு முழுக்க இரசாயனமற்ற இயற்கை விவசாயம் செய்வதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்கிற திட்டம் நம்மிடமும் இருக்கிறது. நாமும் அதை நோக்கியே சென்று கொண்டிருக்கிறோம். இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஆரம்பித்து இயற்கை வளங்கள் வரை அத்தனையையும் உருவாக்க வேண்டும்” என்றவர், இலங்கையில் தன்னை கவர்ந்த ‘அம்மாச்சி உணவகங்கள்’ பற்றியும் பகிர்ந்து கொண்டார்.

“தமிழ்நாட்டில் அம்மா

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# உய்குர்ஸ்: போலி செய்திகளை முடிவுக்குக் கொண்டு வருதல்
## Uyghurs: To Put and End to Fake News






**அ**மெரிக்க அரசாங்கம் சீனாவுக்கு எதிராக ஒரு பனிப்போரை ஆரம்பித்துள்ளது. பைடன் நிர்வாகம் ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியுள்ள நீர்மூழ்கிகளை வழங்குவதற்கு சம்மதித்துள்ளது. இந்த முடிவு சீனாவைச் சுற்றி வளைப்பதற்கான புதிய திணைக்களம் ஒன்றை சீ.ஐ.ஏ (CIA) வில் உருவாக்கியுள்ளது. அத்துடன் சீனாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை இராஜதந்திர ரீதியில் பகிஸ்கரிப்பது என்ற தீர்மானத்தையும் சேர்த்துப் பார்த்தால் அமெரிக்கா ஆரம்பித்துள்ள புதிய பனிப்போரின் மூன்று ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த அடையாளங்களை கண்டுகொள்ள முடியும். இந்த புதிய பனிப்போரின் ஒரு பகுதியாக மனித உரிமைகள், ஜனநாயகம், பெண்கள் உரிமை, தொழிலாளர் உரிமை மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பு என்பனவற்றுக்கு சீனா ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது என்ற கருத்தியல் பிரச்சார அலை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இவையெல்லாம் சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புத் தன்மையை நியாயப்படுத்துவதாகவும், பொதுமக்களைப் பயமுறுத்தி இதற்கு ஆதரவாக நிலைப்பாடு எடுக்கச் செய்வதாகவும் இருக்கின்றது. (அமெரிக்க காங்கிரஸ் சபை பாதுகாப்புத் திணைக்களத்துக்காக 768 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ள நிலையில், பைடனினதும் பெண்டகனினதும் (Pentagon) தேவைகளுக்காக மேலதிகமாக 24 பில்லியன் டொலர்களை ஒதுக்கி செனட்சபை சமீபத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.) இந்த கருத்தியல் பிரச்சாரத்தின் மையப்பொருளாக சீனா சிங்கியாங் சுயாட்சிப் பிரதேசத்தில் (Xinjiang autunomous region) வாழும் உய்குர் முஸ்லீம் மக்களுக்கெதிராக இனவழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது என அமெரிக்க வெகுஜன ஊடகங்கள் தினமும் பிரச்சாரம் செய்து வருகின்றன.

ஆனால் பொதுமக்கள் உட்பட பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு உய்குர்கள் யார் என்பது பற்றியோ, சிங்கியாங் எங்குள்ளது என்பது பற்றியோ, உய்குர்கள் பற்றிய சீனாவின் கொள்கை என்ன என்பது பற்றியோ, உய்குர் என்பதை எப்படி உச்சரிப்பது என்பது பற்றியோ தெரியாமல் உய்குர் இனப்படுகொலை என்ற கருத்தை கொள்வனவு செய்து வைத்திருக்கிறார்கள். இந்த பரவலாக உள்ள அறிவீனம் மக்ஸிம் விவாஸ் (Maxime Vivas) வின் புத்தகத்தின் பெறுமதியை உணர்த்தியுள்ளது. விவாஸ்சின் புத்தகம் சிங்கியாங் மற்றும் உய்குர்கள் பற்றிய அடிப்படைகளை மட்டுமின்றி, சிங்கியாங் பற்றிய சீனாவின் கொள்கையையும், உய்குர்கள் இனப் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்ற பொயப் பிரச்சாரத்துக்கு எதிராகப் பலமான விவாதத்தையும் முன் வைப்பதுடன், அமெரிக்கா தனது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதற்காக எப்படி ஈராக்கில் பேரழிவு மிக்க ஆயுதங்கள் உள்ளன என்று கூறிய பொய்ப் பிரச்சாரங்களையும் வெளிக் கொணர்ந்துள்ளது. விவாஸ்சின் புத்தகம் சீன எதிர்ப்பு விசத்துக்கு எதிரான மருந்தையும் வழங்குகிறது. விவாஸ்சின் புத்தகம் பிரெஞ்சு மொழியில் இருந்தபோதிலும், அதில் ஆங்கில மொழியிலான சுருக்கக் குறிப்புகளும் உண்டு.

சிங்கியாங் என்பது 620,000 சதுர மைல்கள் விஸ்தாரமுள்ள சீனாவின் மிகப் பெரிய மாகாணமாக இருப்பதுடன், அதன் பெரும் பகுதி மக்கள் வாழாத பகுதியாகவும் இருக்கின்றது. இது மத்திய ஆசியாவுக்கு அருகில் சீனாவின் வட

மேற்கில் அமைந்துள்ளது. உய்குர்கள் பெரும்பாலும் கிராமப்புறத்தில் வாழும் முஸ்லீம்கள் ஆவர். இந்த மாகாணத்தில் வாழும் 25 மில்லியன் மக்களில் 45 சத வீதத்தினர் உய்குர்கள் ஆவர். பல ஐரோப்பிய நாடுகளைப் போலவே, சீனாவும் முஸ்லீம் அடிப்படைவாதத்துக்கு முகம் கொடுப்பதுடன், அடிக்கடி பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளது. 2008 இன் பின்னர் முஸ்லீம் அடிப்படைவாதிகளின் பயங்கரவாதத் தாக்குதல்களால் பலர் தங்களது உயிர்களை இழந்துள்ளனர். இந்தத் தாக்குதல்களில் 2008 இல் சீன ஒலிம்பிக்ஸ்சின் போது நடத்தப்பட்ட தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டமை, 2014 இல் ஒரு புகையிரத நிலையத்தில் மேற்கொண்ட கத்திக்குத்து தாக்குதலில் 33 பயணிகள் கொல்லப்பட்டமை என்பனவும் அடங்கும். இவற்றில் மிகவும் கொடூரமானது 2015 இல் சிங்கியாங்கிலுள்ள ஹான் (Han) இன சுரங்கப் பணியாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களில் 31 பேரைக் கொன்ற சம்பவமாகும்.

2015 இற்குப் பின்னர் சீனா சிங்கியாங்கில் நிலவிய இஸ்லாமிய அடிப்படைவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் போன்ற மிரட்டல்களுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தச் செயல்பாட்டின் போது கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டதுடன், பல கைதுகளும் இடம் பெற்றன. 2014 முதல் 2019 வரையான காலத்தில் 12,955 பயங்கரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், 2,052 வெடி பொருட்களும் கைப்பற்றப்பட்டன. இந்த நடவடிக்கையின் பெரும் பகுதியாக இஸ்லாமிய அடிப்படைவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் என்பனவற்றை எதிர்த்துப் போராடுவதற்காக உய்குர்களினதும் ஏனைய துருக்கி (Turkic) மக்களினதும் கலாச்சார, கல்வி, பொருளாதார மட்டத்தை உயர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக சிங்கியாங்கில் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மசூதிகள் மற்றும் தொல்பொருள் நிலையங்கள் கட்டுதல், உய்குர்களின் தொழில் திறமைகளை வளர்க்கும் கல்வி நிலையங்கள் அமைத்தல் என்பனவற்றில் முதலீடுகள் செய்யப்பட்டன.

சீனாவின் இந்தக் கொள்கைகளை உய்குர் மக்களையும், அவர்களது கலாச்சாரத்தையும் அழிக்கும் கொள்கையாக மேற்கத்தைய ஊடகங்கள் பிரச்சாரம் செய்தன. மேற்கத்தைய சக்திகள் கல்வி நிலையங்களை சித்திவதைக் கண்காணிப்பு முகாம்களாகவும் (Concentration Camps), மூளைச்சலவை செய்யும் நிலைங்களாகவும் (Brain wash centres) சித்தரித்தன. விவாஸ்சின் புத்தகம் அவர்களின் குற்றச்சாட்டுகளைப் பின் வருமாறு அட்டவணைப் படுத்தியுள்ளது:
'உய்குர்கள் பன்றி இறைச்சி சாப்பிடாததற்காகவும், மதுபானம் அருந்தாததற்காகவும் அவர்களை இட்சக்கணக்கில் சித்திரவதை முகாம்களில் அடைத்து வைத்து அவர்களது உடல் உறுப்புகள் அகற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு விற்கப்படுவதுடன், பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் மேற்கொள்ளப்படுவதுடன், கட்டாயக் கருத்தடையும் செய்யப்படுகின்றது, பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டும், மசூதிகள் இடிக்கப்பட்டும் வருகின்றன.'
ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை சீனா வன்மையாக மறுத்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் போலியானவை என்றும், உண்மைகளுடன் முரண்படுகின்றன என்றும், சுதந்திரமான ஆய்வாளர்கள் இவற்றை நிராகரிக்கின்றனர் எனவும் விவாஸ் விளக்குகின்றார்.

தன்னை ஒரு சுதந்திரமான ஜெர்மானிய ஊடகவியலாளர் என்று சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவ அடிப்படைவாதியான அட்ரியன் ஸென்ஸ் (Adrian Zenz) என்பவரது விடயத்தை எடுத்துப் பார்க்கலாம். 2019 இல் ஸென்ஸ், 1.8 மில்லியன் உய்குர்கள் கண்காணிப்பு முகாம்களில் அடைத்து வைத்திருக்கப்பட்டிருப்தன் காரணமாக அவர்களது பிறப்பு வீதம் குறைந்துள்ளமையால் இது இனப் படுகொலைக்கு (Genocide) ஒரு சான்று என்று கூறினார். உய்குர்கள் மத்தியில் பிறப்பு விகிதம் குறைந்தமைக்கு வளர்ச்சியடைந்து வரும் நகரமயமாக்கல், வாழ்க்கைத்தரம் உயர்வடைந்தமை, உய்குர்களின் கல்வி வளர்ச்சி மட்டம் அதிகரித்தமை போன்ற காரணங்களையும் விவாஸ் சுட்டிக் காட்டுகிறார். இருந்தும், ஆறு வருடங்களுக்கு முன்னர் உய்குர் சிறுவர்களில் ஆயிரம் பேருக்கு 420 முதல் 600 ஆக இருந்த இறப்பு விகிதம் தற்பொழுது ஆயிரம் பேருக்கு 10.03 வீதமாகக் குறைவடைந்துள்ளது என விவாஸ் சுட்டிக் காட்டுகிறார். அத்துடன், கடந்த நான்கு தசாப்தங்களில் உய்குர் சனத்தொகை 5,550,000 இல் இருந்து 12,720 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஒரு இனத்தை அழிவுக்குள்ளாகுதல் நடந்தால் எப்படி இவ்வாறு சனத்தொகை அதிகரிக்க முடியும் என்பதை ஒருவர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் கூறுகிறார்.

சீனாவுக்கு எதிராக பிரபல்யப்படுத்தப்படும் இன்னொரு விடயம், ஸூம்ரெட் டோவுல் (Zumret Dawul) என்ற உய்குர் பெண் சீன அதிகாரிகளால் மீள் கல்வி முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்ருந்ததாகவும், அங்கு அவர் பிரசவம் முடிந்த பின்னர் அவரது கர்ப்பப்பை பலாத்காரமாக அகற்றப்பட்டது என்ற விடயமாகும். ஆனால், அவர் ஒருபோதும் கல்வி நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என சீன அதிகாரிகள் கூறுகின்றனர். அத்துடன், அவர் தனது மூன்றாவது குந்தையைப் பிரசவித்த பின்னர் அவரது வேண்டுகோளின் பேரிலேயே அவரது குழாய்கள் இறுக்கபட்டன எனவும் அவர்கள் கூறுகிறார்கள். டோவுலின் சகோதரர் அவர் கூறுவது பொய் எனத் தெரிவிப்பதுடன், டோவல் தனது சத்திரசிகிச்சைக்காக கையெழுத்திட்ட ஆவணத்தையும் வைத்தியசாலை பகிரங்கப்படுத்தியுள்ளது.

இன்னொரு பிரசித்தமான விடயம் என்னவெனில், உய்குர் டாக்டர் ஒருவர் ரேடியோ ஃபிறி ஆசியா (Radio Free Asia) வுக்கு 2019 மார்ச் 15 இல் கூறுகையில் தானும் சில சவூதி அரேபிய செல்வந்தர்களும் சீன முஸ்லீம்களின் "கலால் உடலுறுப்புகளை" அறுவடை செய்யும் சட்ட விரோதத் திட்டத்தில் பங்குபற்றியதாகக் கூறினார். ஆனால் ஆறு நாட்கள் கழித்து ஒரு "பொய்யை" (Hoax) மேம்படுத்துவதற்காக தான் அப்படிச் சொன்னதாகக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவரது இந்தக் குற்றச் செயலுக்காக அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை.

சீனர்கள் மசூதிகளை இடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு விவாஸ் பதிலளிக்கையில், இவற்றில் சில பொருத்தமில்லாமலும், பாழடைந்த நிலையிலும் இருந்தால் அவை பற்றி சமயத் தலைவர்களுடனும், அவற்றுக்குப் பொறுப்பான

சபையினருடனும் கலந்துரையாடிய பின்னர் அவை அகற்றப்பட்டு, அந்த இடங்களில் விசாலமான புதிய மசூதிகள் கட்டப்படுகின்றன. கடந்த 70 வருடங்களில் சிங்கியாங்கில் மசூதிகள் 2,000 இல் இருந்து 24,400 ஆக அதிகரித்துள்ளன. சிங்கியாங்கில் ஒவ்வொரு 530 முஸ்லீம்களுக்கும் ஒரு மசூதி உள்ளது.

2019 இல் தொழில் வாண்மையாளர்களுக்கு (Professionals) பயிற்சியளிக்கும் ஐந்து கல்லூரிகளை நிறுவுவதற்காக உலக வங்கி சீனாவுக்கு 50 மில்லியன் டொலர்கள் கடனுதவி அளித்தது. சீனா இந்த நிதியைப் பயன்படுத்தி கண்காணிப்பு (Concentration Camps) அல்லது சித்திரவதை முகாம்களை அமைப்பதாக குற்றச்சாட்டு எழுந்ததால், உலக வங்கி சம்பந்தப்பட்ட இடத்தில் நேரடி ஆய்வு நடத்தியது. 2019 நொவம்பர் 11 இல் உலக வங்கி வோசிங்டனில் தனது ஆய்வு பற்றிய அறிக்கையை வெளியிட்ட போது இவ்வாறு முடிக்கின்றது:
“ஆய்வுகள் இந்தக் குற்றச்சாட்டுகளுடன் ஒத்து வரவில்லை.”

மிக முக்கியமாக விவாஸ் சுட்டிக் காட்டுவது யாதெனில், அமெரிக்காவின் வெகுஜன ஊடகங்களும், அதிகாரிகளும் பரப்பும் உய்குர் மக்கள் மீதான சீன இனவழிப்பு என்ற இந்தச் செய்திகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவு கிடைக்கவில்லை என்பதைத்தான். கே ஜோன்சன் மக்டோகோல் (Gay Johnson McDougall) என்ற, Leitner Center if International Law மற்றும் Justice of Fordham University என்பனவற்றில் வதிவிட ஆராய்சியாளராக இருப்பவரும், மனித உரிமைகள் விவகாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த வழக்கறிஞராக இருப்பபருமான பெண்மணி சீனா இலட்சக்கணக்கான உய்குர் இனத்தவர்களை தடுப்பு முகாம்களில் அல்லது கண்காணிப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கிறது என 2018 ஓகஸ்ட் 13 இல் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் வைத்து பரபரப்பான ஒரு குற்றச்சாட்டை முன் வைத்த பின்னர்தான் ஐ.நா. இந்தக் குற்றச்சாட்டுகளை ஆதரிக்கிறது என்ற கருத்து உருவானது.

உறுதிப்படுத்தப்படாமல், வெறுமனே நம்பிக்கையான தரப்புகளிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் எனக் கூறிக்கொண்டு, மக்டோகோல் இந்தக் குற்றச்சாட்டுகளை முன் வைத்ததும் அதை அமெரிக்க ஊடகங்களான New York Times, Wall Street Journal, Financial Times என்பன பெரிய அளவில் பிரச்சாரம் செய்தன. இந்தப் பத்திரிகைகள் இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி சுதந்திரமாக ஆய்வு செய்ய முயற்சிக்காமல், தம்மைத்தாமே மனித உரிமை அமைப்புகள் எனக் கூறிக்கொள்ளும் உலக உய்குர் காங்கிரஸ், சீன மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் போன்ற, ஜனநாயகத்துக்கான தேசிய நிதியம் (National Endowment for Democracy) என்ற அமைப்பிடமிருந்து நிதி பெறும் குழுக்களையே சார்ந்திருந்து செய்திகளை வெளியிட்டன.

அத்துடன், சிங்கியாங்கில் உள்ள உய்குர்களின் உரிமைகளை சீனா மதித்து நடக்க வேண்டும் என்றொரு தீர்மானத்தை அமெரிக்கா ஐ.நாவில் கொண்டு வந்த பொழுது, அதன் 193 அங்கத்துவ நாடுகளில் 39 நாடுகள் மட்டுமே அத்தீர்மானத்தை ஆதரித்தன. இனவழிப்பு குற்றச்சாட்டை முன் வைப்பவர்களில் பெரும் பகுதியினர் சி.ஐ.ஏ உடன் அல்லது ஜனநாயகத்துக்கான தேசிய நிதியத்துடன் தொடர்பு வைத்திருக்கும் குழுக்கள் அல்லது தனி நபர்கள் ஆவர். உதாரணமாக, இதில் பிரதானமானது, உய்குர்களை சீனா நடத்தும் முறை பற்றி குற்றம் சுமத்தும், தன்னைத்தானே மனித உரிமை அமைப்பாக பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கும் உலக உய்குர் காங்கிரஸ் என்ற அமைப்பாகும். 2004 இல் ஜெர்மனியின் மூனிச் (Munich) நகரில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, சிங்கியாங்கிற்கு சுதந்திரம் வேண்டும் எனப் பிரச்சாரம் செய்து வருவதுடன், அது கிழக்கு துருக்கிஸ்தான் (East Turkestan) என்ற தனி நாடு எனவும் அழைத்துக் கொள்கிறது. இந்த அமைப்பு சிஐஏவால் உருவாக்கப்பட்ட Radio Free Asian/Radio Liberty போன்ற வானொலிகள் மூலம் பிரச்சாரம் மேற்கொள்கிறது.

அத்துடன் இந்த அமைப்பிற்கு சிஐ.ஏவின் மென் கருவியான (Soft Arm) ஜனநாயகத்துக்கான தேசிய நிதியத்தினால் நிதியுதவி அளிக்கப்படுகிறது. முன்னாள் தபால் ஊழியரும், பிரெஞ்சிய (France) கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் உறுப்பினருமான (ஆனால் எந்தவொரு சீன சார்புக் கட்சியிலும் அங்கத்தவரல்லாத) விவாஸ், அந்த தபால் நிலையம் மூடப்பட்ட பின்பு தன்னை ஒரு எழுத்தாளராக மாற்றிக் கொண்டுள்ளார். உய்குர்கள் பற்றிய இந்த புத்தகத்தை எழுதுவதற்கு முன்பு அவர் திபெத் (Tibet) பற்றியும், அங்கு சீனக் கொள்கைகள் குறித்தும் ஒரு புத்தகத்தை எழுதியிருந்தார். திபெத் மற்றும் சிங்கியாங் என்பனவற்றுக்கு இரு தடவைகள் பயணம் மேற்கொண்ட விவாஸ், மண்டரின் (Manadarin) மற்றும் உய்குர் மொழிகளைப் பேசும் அல்லது வாசிக்கும் ஆற்றல் இல்லாமையால் அவரது ஆராய்ச்சி இயல்பாகவே மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்துள்ளது. இருந்த போதிலும் அவர் தனது பெறுமதிமிக்க புத்தகத்தில் உய்குர்களுக்கு எதிரான சீன இனவழிப்பு குற்றச்சாட்டுகள் போலியானவை என்பது குறித்து நம்பத்தகுந்த வாதங்களை முன்வைத்துள்ளதுடன், அமெரிக்கா திட்டமிட்ட முறையில் இந்த மாதிரியான குழுக்களுக்கு நிதியுதவி அளித்து எவ்வாறு ஊக்குவிக்கிறது என்பதையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

**இந்தநூலினை மதிப்பீடு செய்தவர்: ROGER KEERAN**

---

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

உணவகங்களைப்போல இலங்கையில் ‘அம்மாச்சி உணவகங்கள்’ இயங்குகின்றன. இங்கு அரசே நடத்துகிறது. அங்கு அம்மாச்சி உணவகங்கள் உழவர் சந்தைப்போல இயங்குகின்றன. விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருள்களை உழவர் சந்தை மூலம் நேரடியாக மக்களிடம் விற்பனை செய்வதுபோல அம்மாச்சி உணவகங்கள் செயல்படுவதால், உணவுகள் சுத்தமாகவும் சுவையாகவும் இருக்கின்றன. இந்த உணவகங்களின் கட்டடங்கள் ஆங்காங்கே இருக்கின்றன. குழுவாகவோ, தனியாகவோ சமைத்து விற்பனை செய்கிறார்கள். அல்லது வீட்டிலேயே சமைத்துக் கொண்டு வந்தும் விற்பனை செய்கிறார்கள். அந்த இடத்துக்கான குறைந்தபட்ச வாடகையைக் கொடுத்து விடுகிறார்கள். சைவம், அசைவம் என இரண்டு உணவு வகைகளும் கிடைக்கின்றன. நானும் சைவ, அசைவ உணவுகளை உண்டதோடு, தேங்காய்ப்பால் ஊற்றிய விளாம்பழச்சாறும் அருந்தினேன். விலையும் மலிவாகவே இருக்கிறது” என்கிறார் மகிழ்ச்சி ததும்பப் பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில்.

# இந்தியாவிடமிருந்து 85 எண்ணெய் தாங்கிகளை மீளப் பெற்றுள்ளோம்!

## -(முன்னாள்) அமைச்சர் உதய கம்மன்பிலவின் பேட்டி



**கேள்வி:** திரிகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கிகள் வளாகத்தை (Oil Farm) இந்தியாவுடன் இணைந்து கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் நீங்கள் கைச்சாத்திட்டிருக்கிறீர்கள். இந்தியா இலங்கையில் பூகோள அரசியல் நலன்களைக் கொண்டுள்ள ஒரு நாடு. இந்த ஒப்பந்தம் இலங்கையின் சக்தி வள பாதுகாப்பில் இந்தியா தலையீடு செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்க முடியும் என நீங்கள் கருதவில்லையா?

**பதில்:** எண்ணெய் தாங்கிகள் வளாகம் சம்பந்தமாக முன்னர் இந்தியாவுடன் செய்திருந்த ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டும் மதித்தும்தான் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது. மூன்று வெவ்வேறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களால் மூன்று ஒப்பந்தங்கள் முன்னர் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவுடனான எமது தற்போதைய கடமைப்பாட்டைப் புரிந்து கொள்ளாமல் நாம் எதைக் கையெழுத்திட்டோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. 1987 யூலை 29 இல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இந்திய ~ இலங்கை உடன்படிக்கை செய்த பொழுது அதற்குச் சமாந்தரமாக குறிப்பிட்ட சில நிபந்தனைகள் சம்பந்தமாக கடிதங்கள் பரிமாறப்பட்டதுடன், வாய் மூலமும் இணங்கப்பட்டது. கருத்தின் அடிப்படையில் அல்லது வாய்மூலப்படி ஒப்பந்தங்கள் எழுத்து வடிவம் எடுத்தன. அவர்கள் தமது வாய்மூல உடன்பாடுகளை எழுதிக் கொண்டனர். அது கூறுகிறது: “எங்களுக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் சரியான முறைப்படி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மேன்மை தங்கியவர் (His Excellency) நட்புணர்வுடன் உறுதிப்படுத்தினார்.”

பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறினார், “எமக்கிடையில் புரிந்துணர்வை எட்டியதின் அடிப்படையில் சரியான முறைகளில் செய்ததை இது உறுதிப்படுத்துகிறது.”

இந்த ஒப்பந்தத்தின் மூன்றாவது விடயம்: திரிகோணமலை எண்ணெய் தாங்கிகள் வளாகத்தை இந்தியாவும் இலங்கையும் கூட்டு முயற்சியாக செயற்படுத்துவதை மீட்டெடுப்பதும் நடைமுறைப் படுத்துவதுமாகும். 1987 உடன்படிக்கையின் பின்னரே இந்த எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் உரிமையை இந்தியா இலங்கையிடமிருந்து பெற்றுக் கொண்டது. 2003 இல் திரு.ஜெயவர்த்தனவின் மருமகனும், அப்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இன்னொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தம் எண்ணெய் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்வதில் இலங்கையின் உரிமையை மறுப்பதாக இருந்தது. அது இந்த 99 எண்ணெய் தாங்கிகளையும் 35 வருட காலத்தில் இந்தியா அபிவிருத்தி செய்வதற்கு மேலதிக உரிமையை வழங்கியது. இந்த ஒப்பந்தம் 2038 ஆம் ஆண்டிலேயே காலாவதியாகிறது. நாங்கள் இப்பொழுது 2022 இல் இருக்கிறோம். 2017 இல் அப்போதைய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம காலஞ்சென்ற இந்திய அமைச்சர் சுஸ்மா சுவராஜ் அவர்ளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்தார். அதில் இந்த தாங்கிகளை 99 வருடக் குத்தகைக்கு LIOC (Lanka Indian Oil Company) இற்கு வழங்குவதற்கு இலங்கை ஒப்புக் கொண்டிருந்தது. எனவே இந்தியா இந்த தாங்கிகளை வைத்து இந்தியாவின் பூகோள அரசியல் இலங்கையில் உருவாகும் நிலை ஏற்பட்டது எம்மால் அல்ல, அது ஐக்கிய தேசியக் கட்சி அரசுகள் தொடர்ச்சியாகச் செய்த மூன்று உடன்படிக்கைகளினாலேயே ஏற்பட்டது. இந்தியாவுக்கு இந்தக் தாங்கிகளில் வர்த்தக நோக்கம் எதுவும் கிடையாது. இந்தியாவுக்கு தேசிய பாதுகாப்பு நலன்கள்தான் உண்டு. 2020 ஒகஸ்ட் 12 இல் நான் சக்தி வள அமைச்சராகப் பதவியேற்ற பொழுது, அமைச்சர்களின் கடமைகள், செயற்பாடுகள் குறித்த விபரங்கள் அடங்கிய வர்த்தமானி ஒன்று ஜனாதிபதியால் 2020 ஒகஸ்ட் 9 இல் வெளியிடப்பட்டது. அதில் சக்தி வள அமைச்சின் கீழான முன்னுரிமைகள் பட்டியலிடப்பட்டிருந்தன. அதில் நான்காவது முன்னுரிமையாக இந்த எண்ணெய் தாங்கிகள் வளாகத்தை புனரமைத்து பயன்படுத்துவது குறித்து விவரிக்கப்பட்டிருந்தது. முன்னைய அரசாங்கம் மூன்று வெவ்வேறு உடன்படிக்கைகள் மூலம் இந்தக் தாங்கிகளை இந்தியாவுடன் பூட்டுப் போட்டு வைத்திருந்ததால், இந்தக் கடமையை நடைமுறைப்படுத்தும் போது

சுயாதீனமாகச் செயல்பட வேண்டும் என நான் எண்ணினேன். நான் இந்தியாவுடன் பேசினேன். சிலவற்றை விட்டுக் கொடுப்பது இலேசானது. ஆனால் அவற்றை திருப்பி எடுப்பது கடினமானது. அது எனக்கு இந்தியாவுடன் கடினமான காலமாக இருந்தது. நாங்கள் 22 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். அதன் பின்னர் 99 தாங்கிகளில் 85 ஐ எம்மால் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலுமாயிருந்தது. இவற்றை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நான் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை. முன்னர் இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்ததை திரும்பவும் எங்களுடையதாக நான் கொண்டு வந்தேன். 14 தாங்கிகள் மேலுமொரு 34 வருடங்களுக்கு இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன. 24 தாங்கிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டன. மீதமுள்ள தாங்கிகள் 'ரின்கோ பெற்றோலிய ரேர்மினல் லிமிட்டெட்' (Trinco Petroleum Terminal Limited) என்ற நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்படும். இதில் 51 வீதமான பங்குகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உரியனவாகவும், மிகுதி லங்கா இந்தியன் ஓயில் கொம்பனிக்கு (LIOC) உரியனவாகவும் இருக்கும். இது ஒரு அரச கொம்பனியாகும். இது பொது நிறுவன திணைக்கள சுற்று நிருபங்களின் அடிப்படையில் செயல்படும். இதன் கணக்குகள் கணக்காளர் நாயகத்தினால் பரிசீலனை செய்யப்படும். கோப் (COPE) அமைப்பு இதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்ய முடியும்.

இது ஒரு வேடிக்கையான நாடு. அதனால் நான் விரக்திக்கு உள்ளாகியுள்ளேன். 99 தாங்கிகளில் 85 ஐ மீளப் பெறுவதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளானேன். இதையிட்டு என்னை புகழ்வதற்குப் பதிலாக என்னைத் தாக்குகிறார்கள். இதுவா தேசபக்தி? அவர்கள் இந்திய ஏஜண்டுகளோ எனத் தெரியவில்லை. ஏனெனில், இந்திய கட்டுப்பாட்டில் இருந்த 85 தாங்கிகளை நான் மீளவும் எடுத்ததால் வெகுண்டு போய் இருக்கின்றனர்.

**கேள்வி:** ஆனால், இப்பொழுது அங்கு இந்தியத் தலையீடு இருப்பதால், அவர்கள் இந்தத் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்வார்களா?

**பதில்:** முன்பு 99 தாங்கிகளும் அவர்களின் கீழேயே இருந்தது. இப்பொழுது இந்திய தலையீடு கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** எனது கேள்வி, இந்தியத் தலையீடு இருப்பதால், இலங்கையின் சக்தி வள பாதுகாப்பு விடயங்களில் இந்தியா தலையிடுவதற்கு இடம் இருக்குமா?

**பதில்:** எமது சக்தி வள பாதுகாப்பில் இந்தியாவுக்கு இருந்த தலையீடு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. முன்பு முழு தாங்கிகளும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தது. இப்பொழுது அது 14 ஆக குறைந்துள்ளது.

**கேள்வி:** இப்பொழுது இந்த உடன்படிக்கை கையெழுத்தாகி, அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது. அடுத்த நடவடிக்கை என்ன?

**பதில்:** இதை பகிரங்கப்படுத்துவதே எனது அடுத்த நடவடிக்கை. நீங்கள் சக்தி வள அமைச்சின் இணையத்தளத்தைத் திறந்து பார்த்தால், இந்த ஒப்பந்தத்தை உங்களால் தரவிறக்கம் செய்து படிக்க முடியும். எங்களுக்கு மறைப்பதற்கு எதுவும் இல்லை. இந்த ஒப்பந்தம் இரகசியமாகக் கைச்சாத்திடப்பட்டதாகச் சிலர் கூறுகின்றனர். அது அப்படியல்ல. அமைச்சரவைக்குப் போவதற்கு முன்னர் இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் குறித்து நான் பொது மக்களுக்கு தெரியப்படுத்தினேன். அதற்கு முதல் அரசியல் கட்சிகளுடன் இணைந்துள்ள எல்லாத் தொழிற்சங்கங்களுடனும் கலந்தாலோசித்தேன். மூன்று தடவைகள் இது பற்றி அவர்களுக்கு விளக்கினேன். நான் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஸ்ட முகாமைத்துவத்துடனும் கலந்தாலோசித்தேன். ஜனவரி 3 ஆம் திகதி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பதாக அமைச்சரவையிடம் முன் அனுமதி பெற்றேன் ஜனவரி 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தேன். இதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நான் திட்டமிட்டுள்ளேன்.

**கேள்வி:** இலங்கையில் தொழிற்சங்கத் துறையினருடன் உறவுகளைப் பேணுவதென்பது மிகவும் கடுமையான செயல்பாடாகும். நீங்கள் அவர்களை பணியச் செய்வதுடன், இந்த நேரத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுக்கவும் வேண்டும். இதை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

**பதில்:** இதைப் பற்றிப் பேசுவது மிகவும் காலத்துக்கு முந்திய ஒன்றாகும். நான் ஒரு அமைச்சர் என்ற வகையில் எல்லாத் தொழிற்சங்கங்களுடனும் மாதாந்தம் அவர்களது அரசியல் கண்ணோட்டங்களின் அடிப்படையில் சந்தித்துப் பேசுவது வழக்கம். இந்தச் சந்திப்புகளில் ஜே.வி.பியினரை நான் காண்பதில்லை. அவர்களைப் பற்றி நான் விசாரிப்பதுண்டு. இந்தச் சந்திப்புகள் நடந்த பின்பு அவர்கள் ஏன் இதைத் தவற விடுகிறார்கள் என அவர்களிடம் நான் கேட்பதுண்டு. அவர்களது பங்களிப்பும் தேவையென்பதால் அடுத்த தடவை இந்தச் சந்திப்புகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர்களிடம் நான் கேட்பதுண்டு. எனக்கு அவர்களுடன் மிகவும் அன்னியோன்யமான உறவுகள் உண்டு. நான் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறேன். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நான் செய்தவற்றை அவர்கள் பகிரங்கமாகப் பாராட்டியிருக்கிறார்கள். நாங்கள் வித்தியாசமான அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தங்கி வாழ்கிறோம். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவர்களது எதிர்காலம். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால நன்மைக்காக செய்யப்படுவனவற்றிற்கு எதிராக அவர்கள் ஒருபோதும் செல்லமாட்டார்கள் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு.


**கேள்வி:** எனது முன்னைய கேள்விகளில் ஒன்று, இந்த தாங்கிகளை அபிவிருத்தி செய்வதில் என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன? அந்தத் திட்டங்கள் என்ன?

**பதில்:** 14 தாங்கிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்துவதற்காக இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்வதில் எந்தப் பிரச்சினையுமில்லை. உடனடியாக அபிவிருத்தி செய்வதற்காக 24 தாங்கிகள் இலங்கை பெற்றோலியக்

கூட்டுத்தாபனத்தால் கையேற்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தாங்கியையும் அபிவிருத்தி செய்வதற்கு 200 மில்லியன் ரூபா எமக்குத் தேவை. எமக்குப் பணம் தேவை. எமது தினசரி வருமானம் 1 பில்லியன் ரூபாய்களுக்கு அதிகமானதாகும். நாங்கள் இந்த நாட்டின் பெரிய கூட்டு நிறுவனமாகும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விநியோகம் செய்யப்படுவதற்காக, பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக இவற்றைப் பயன்படுத்துவார்கள். தற்போதைய சூழ்நிலையில் முழு நாடும் கொழும்பிலிருந்து பெற்றோலியப் பொருட்களைப் பெறுவதால், போக்குவரத்துக்கு பெருந்தொகை செலவாகிறது. பின்னர் திரிகோணமலையிலிருந்து நாங்கள் பெற்றோலியப் பொருட்களை வட மாகாணம், கிழக்கு மாகாணம், வட – மத்திய மாகாணம், குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு விநியோகிப்போம். இந்த நடவடிக்கையின் மூலம் நாங்கள் வருடாந்தம் குறைந்த பட்சம் 1 பில்லியன் ரூபாய்களைச் சேமிக்க முடியும்.

**கேள்வி:** இந்த நடவடிக்கைத் திட்டத்துக்கு உங்களிடம் கால வரையறை ஏதாவது உள்ளதா?

**பதில்:** இது உடனடியாகச் செய்யப்பட வேண்டும். ஒரு வருடத்துக்குள் அந்த இலக்கு பூர்த்தி செய்யப்பட வேண்டும். றின்கோ பெற்றோலியம் ரேர்மினல் லிமிட்டெட் ஒரு கூட்டு முயற்சியாகும். இது செயற்பட சிறிது காலம் எடுக்கும். சாத்தியக்கூறுகள் பற்றிய அறிக்கையொன்றை ஆறு மாதத்துக்குள் தயாரிப்பதும், வர்த்தக திட்டத்தை ஒன்றரை ஆண்டுகளுக்குள் தயாரிப்பதுமே எமது திட்டமாகும். எனவே, இந்த எண்ணெய் தாங்கிகள் வளாகத்தை புனரமைத்து அபிவிருத்தி செய்ய வேண்டும். உங்களுக்குத் தெரியும், இந்த தாங்கிகள் வளாகம் 100 வருடங்கள் பழமையானது. எங்களுக்கு ஒரு மிகச் சிறந்த புனரமைப்பு தேவை. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் அவர்கள் இவற்றை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. எம்மிடம் மிதமான சாத்தியக்கூறுகள் உள்ளன. முதலாவதாக, நாங்கள் இந்த தாங்கிகளை சக்தி வள பாதுகாப்பு சேமிப்பைப் பேணுவதற்காக



உதய கம்மன்பில

அரசாங்கத்துக்கு வாடகைக்கு வழங்க வேண்டும். இரண்டாவதாக, நாங்கள் இந்தத் தாங்கிகளை எண்ணெய் முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்க வேண்டும், பங்குச் சந்தையில் எண்ணெய் விலைகள் ஏறி இறங்கியபடி இருக்கிறது. இந்த ஏற்ற இறக்கத்தின் போது முதலீட்டாளர்கள் குறைந்த விலையில் எண்ணெயை வாங்கி பின்னர் கூடிய விலைக்கு விற்பார்கள்.

திரிகோணமலை ஒரு அதிக வெளிச்சமுள்ள மாவட்டம். எங்களுக்கு அங்கு ஒரு காற்றாலை சக்தி நிலையம் இருக்கிறது. நாங்கள் சூழலியல் சார்ந்த சுற்றுலாத்துறையை அங்கே ஏற்படுத்தலாம். நாங்கள் இந்த தாங்கிகளை சாப்பாட்டு எண்ணெய் (Edible Oil), பாம் எண்ணெய் (Palm Oil) போன்றவற்றையும், உயிர் வாயுவையும் (Bio Gas) சேமித்து வைக்கப் பயன்படுத்தலாம். எதிர்கால சக்தி வளமான நைட்ரோஜினைக் கூட சேமித்து வைக்கப் பயன்படுத்தலாம். எனவே, அங்கே சாத்தியக்கூறுகள் பல உள்ளன. இந்த நிறுவனம் சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வை முடிக்கும் வரை நாங்கள் சற்றுப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

**கேள்வி:** இந்த விடயத்தில் இந்தியாவுக்கு வர்த்தக நலன்களை விட பூகோள அரசியல் நலன்களே கூடுதலாக உள்ளது என முன்னர் நீங்கள் கூறினீர்கள். அப்படியானால் இந்தியா உண்மையில் அவற்றை வர்த்தக ரீதியில் அபிவிருத்தி செய்யுமா?

**பதில்:** அவர்கள் இந்த தாங்கிகள் வளாகத்தை நாசம் செய்தால் அது ஒரு கற்பனைத் தீர்வாக இருக்கும். அதைத்தான் நான் எண்ணினேன். அவர்கள் சில வேளைகளில் வித்தியாசமான பார்வைகளைக் கொண்டிருக்கலாம். இந்த தாங்கிகள் வளாகம் எட்டு மில்லியன் பீப்பாய்கள் பெற்றோலியத்தை சேமித்து வைக்கக்கூடிய வசதியுள்ளவை. இந்தியாவை அதன் எதிரி இடைவெளியில்லாமல் தாக்கினால் இந்தத் தாங்கிகளிலிருந்து அவர்களது விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகள் என்பனவற்றுக்கு இடையூறின்றி விநியோகம் செய்ய முடியும். எனவே இது இந்தியாவுக்கு தேசிய பாதுகாப்பு பயமுறுத்தல் விடயம். இது இல்லையென்றால் அங்கே பயமுறுத்தல் எதுவுமில்லை. அவர்களுக்கு வர்த்தக நலன்கள் இருந்திருந்தால் கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்தத் தாங்கிகளை அபிவிருத்தி செய்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. அவர்களுக்கு வர்த்தக நலன்களில் நாட்டமிருப்பதாக நான் நினைக்கவில்லை, ஆனால் நாம் அதைச் செய்வோம். அதுவே அவர்கள் 14 தாங்கிகளை வைத்திருப்பதற்குக் காரணம். மிகுதித் தாங்கிகள் எம்மால் எடுக்கப்பட்டுவிட்டன. அவர்களுடைய அபிவிருத்தி இந்தியாவினுடையது அல்ல, ஆனால் எமக்குரியது. இந்தப் பாரிய சொத்து பிரித்தானியாவால் எமக்கு வழங்கப்பட்ட நன்கொடை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் துரதிஸ்ட்டவசமாக கடந்த 100 வருட காலத்தில் இரண்டாம் உலக யுத்த காலத்தைத் தவிர இதை நாம் ஒருபோதும் பயன்படுத்தியதில்லை.

**கேள்வி:** இந்தியாவின் ஈடுபாட்டுக்கான திட்டங்கள் மற்றும் இதை அவர்கள் அபிவிருத்தி செய்வார்கள் என்பதற்கு என்ன நம்பிக்கை உள்ளது?

**பதில்:** அவர்கள் பங்குகளில் முதலீடு செய்து கொள்வனவு செய்துள்ளார்கள், வேறு என்ன வேண்டும்? சுமார் ஒரு மில்லியன் ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது 51 வீதமான பங்கை பராமரிப்பதற்கு 510 மில்லியன் ரூபாய்களை முதலீடு

செய்துள்ளது. லங்கா இந்தியன் ஒயில் கொம்பனி தனது 49 வீத பங்கைப் பராமரிப்பதற்கு 490 மில்லியன் ரூபாய்களை முதலீடு செய்துள்ளது. அவர்கள் முதலீடு செய்யவில்லையென்றால் என்ன நடக்கும்? இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கு 99 வீதமாக அதிகரிக்கும். இது சாதாரணமாக அது போன்றதுதான். அவர்கள் முதலீடு செய்யவில்லை என்றால் கொம்பனியில் தமது பங்கை இழக்க வேண்டி ஏற்படும்.

**கேள்வி:** இவற்றை நாம் சொந்தமாக அபிவிருத்தி செய்வதற்கு எம்மிடம் போதிய பொருளாதார பலம் உள்ளதா?

**பதில்:** பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்ற 24 தாங்கிகளையும் அபிவிருத்தி செய்வதிலேயே எமது முழுக் கவனமும் உள்ளது. ரின்கோ பெற்றோலியம் ரேர்மினல் லிமிட்டெட்டில் எமது முதலீடு 11 பில்லியன் ரூபாய்களாகும்.

**கேள்வி:** எரிபொருள் விநியோகம் நிச்சயமற்றது எனச் சிலர் கூறுகிறார்கள். எரிபொருள் விநியோகம் குறித்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**பதில்:** உங்களுக்குத் தெரியும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், சம்பிக்க ரணவாக்க போன்றோர் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் எனக் கூறி வருகின்றனர். 2021 யூன் மாதத்திற்குப் பின்னர் அவர்கள் இவ்வாறு கூறி வருகின்றனர். நான் எனது குழுவின் உதவியுடன் இடையூறில்லாத எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்தி வரக்கூடியதாக உள்ளது. அவர்களுடைய எச்சரிக்கைகள், எதிர்வு கூறல்கள் மத்தியில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லையென்பதை நீங்கள் காண முடியும். பெற்றோலியம் என்பது மிகப்பெரிய இறக்குமதிப் பொருள். எமது ஏற்றுமதியில் மூன்றிலொரு வருவாயை பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதிக்குச் செலவிடுகின்றோம். இந்த நிலைமைகளுக்கு மத்தியிலும் இடையூறற்ற எரிபொருள் விநியோகத்தை எம்மால் உத்தரவாதப்படுத்த முடிகிறது. மாவு, பால் பவுடர், எல்.பி.ஜி (LPG), சீமெந்து என்பனவற்றுக்கு தட்டுப்பாடு இருந்த போதிலும் எரிபொருளுக்கு இல்லை. பெற்றோலியப் பொருட்களை இந்த நாட்டில் உற்பத்தி செய்வது இல்லை.

அவற்றை இறக்குமதி செய்வதற்கு எம்மிடம் போதியளவு வெளிநாட்டு நாணயம் இல்லை. மூன்றாவதாக, எம்மிடம் போதிய களஞ்சிய வசதிகள் இல்லை. இதற்கு 25 முதல் 60 மில்லியன் டொலர்கள் வரை கடன் வசதி தேவை. இலங்கை போன்ற ஒரு பலவீனமான நாட்டுக்கு சிரமமெடுத்து ஒரு கப்பலை அனுப்புவதற்கு யாரும் தயாரில்லை. இந்தக் கட்டத்தில் ஒரு சவாலான நிலைமைக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம். ஆனால் எமக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். எனவே, இடையூறற்ற எரிபொருள் விநியோகத்தை நாம் உத்தரவாதப்படுத்த முடியும். நல்லது நடக்கும் என நான் நம்புகிறேன்.

**கேள்வி:** ஜனவரியின் பின்னர் நிலைமை சீராக இருக்கும் என முன்னர் நீங்கள் கூறினீர்கள். அது பற்றி மேலும் விளக்க முடியுமா?

**பதில்:** அது எரிபொருள் சம்பந்தமாக மட்டுமே. நாங்கள் பல்வேறு கடன் பெறுகை சம்பந்தமாக வேலை செய்து வருகின்றோம். அவை பேச்சுவார்த்தைகளில் உள்ளன. அந்தப் பேச்சுவார்த்தை பற்றிய விபரங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிடுவது குழப்பத்தை ஏற்படுத்தி விடும்.

**கேள்வி:** முன்னதாக நீங்கள் சில மத்திய கிழக்கு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினீர்கள். அவை பலனளித்தனவா?

**பதில்:** இல்லை. ஒரு காரணம் எதிரிடையான விளம்பரப் பிரச்சாரம். எனவே, விடயங்கள் இறுதி செய்யப்படும் வரை அவை பற்றிப் பேசுவதில்லை என நான் தீர்மானித்துள்ளேன்.

**கேள்வி:** என்ன அது எதிரிடையான விளம்பரப் பிரச்சாரம்?

**பதில்:** அவை பற்றிக் கதைத்துப் பிரயோசனம் இல்லை. நாங்கள் இந்த அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் விடயங்களைச் செய்யும் போது இந்த அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**கேள்வி:** இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் என்ன?

**பதில்:** டொலரில் அல்லாமல் தினசரி 1,000 தொன் (Furnace) எண்ணெய் வழங்குவதற்கு நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்த எண்ணெய் ஒரு குறிப்பிட்ட அளவு கையிருப்பே எம்மிடம் உண்டு. எனவே நாம் அதை இறக்குமதி செய்வதானால் அவர்கள் அதற்கான டொலரைக் கண்டு பிடிக்க வேண்டும். எமது மக்கள் சந்தையில் தடையில்லாமல் பெற்றோலையும் டீசலையும் பெறுவதை உத்தரவாதப்படுத்துவதானால், மாதாந்தம் 350 – 400 மில்லியன் டொலர்கள் வரை தேட வேண்டிய சுமையை எனக்கு முன்னையவர்கள் என்மீது சுமத்திவிட்டுச் சென்றிருக்கின்றனர். சக்தி வள அமைச்சர் என்ற வகையில் இந்தச் சுமையை கட்டாயம் சுமக்க வேண்டியவனாக இருக்கின்றேன். ஆனால் என்னால் இன்னொரு அமைச்சின் சுமையைச் சுமக்க முடியாது. டொலர்களைக் கண்டு பிடிக்கும்படி அவர்களிடம் சொல்லுங்கள்! பொருளை இறக்குமதி செய்வதற்கு.

**கேள்வி:** நீங்கள் அமெரிக்காவின் New Fortress Energy நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட LNG ஒப்பந்தத்தை விமர்சிக்கிறீர்கள். ஆனால் இந்தியாவுடனான ஒப்பந்தத்தில் வேறொரு நிலையை எடுக்கிறீர்கள். ஏன் அப்படி?

**பதில்:** அமெரிக்கா, இந்தியா, சீனா அல்லது வேறெந்தவொரு நாட்டுடனும் எனக்கு மனஸ்தாபம் இல்லை. நான் எனது நாட்டை நேசிக்கிறேன். நான் எனது நாட்டுக்காக எதுவாயினும் சாதகமாக இருப்பேன். எனது நாட்டு நலன்களுக்கு எதிரான எதுவாயினும் அதற்கெதிராக இருப்பேன். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசாங்கம் அதானி குழுமத்துடன் (Adani Group) ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்ய முயற்சித்தது. நாம் அதைக் கடுமையாக எதிர்த்து அது நடைபெறாமல் பார்த்துக் கொண்டோம். இது இந்தியாவுடன். இது ஜனாதிபதி பெற்ற மக்கள் அங்கீகாரத்துக்கு எதிரானது. ஜனாதிபதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், கிழக்கு முனையத்தை அரசாங்கமே அபிவிருத்தி செய்யுமென்றும், மேற்கு முனையம் மட்டும் தனியார் துறையினருடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்படும் என்றும் கூறியிருந்தார். இங்கே 99 தாங்கிகள் இந்தியாவிடம் இருந்தன. அவை அழிவை நோக்கி இருந்தன. அவற்றை இந்தியாவிடம் இருந்து திருப்பி எடுப்பது இலங்கையின் நலன்களுக்கு உகந்ததாக இருந்தது. New Forress Energy ஒப்பந்தம் இலங்கையின் நலன்களுக்கு மிகவும் அழிவுகரமானது.

# அமெரிக்க நிதியுதவி வேண்டாம் – நேபாள மக்கள் போர்க்கொடி



**நே**பாள மக்களின் கடுமையான எதிர்ப்பால், அமெரிக்காவிடமிருந்து கிடைக்கவுள்ள நிதியுதவி பற்றிய விவாதத்தை, பெப்ரவரி 20ந் திகதி நேபாள பாராளுமன்றம் 4 நாட்களுக்குத் தள்ளி வைத்தது.

2017 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அரசு உதவி நிறுவனம் ஒன்று, நேபாளத்திற்கு 50 கோடி அமெரிக்கா டொலர் உதவியைச் செய்வதாக ஒப்புக் கொண்டது. இந்த நிதியுதவியைக் கொண்டு மின் விநியோகம் மற்றும் 300 கிலோமீட்டர் நீளமான சாலைகளை மேம்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இந்த நிதியைத் திரும்பத் தர வேண்டியதில்லை என்றும், வேறு எந்த நிபந்தனைகள் எதுவும் இல்லை என்றும் அந்த நிறுவனம் கூறியிருந்தது.

ஆனால், நிதியுதவி என்ற பெயரில் தங்கள் திட்டங்களை நேபாளத்தின் மீது திணிக்கிறார்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்த நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள பாராளுமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது. ஒப்புதலைத் தருவதா, வேண்டாமா என்று முடிவு செய்ய நடைபெறவிருந்த விவாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மக்களின் கடுமையான எதிர்ப்பே தள்ளி வைக்கும் முடிவை எடுப்பதற்கான காரணமாக உள்ளது.

இந்த நிதியுதவியை நேபாளம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா தனது தூதரகம் மூலமாகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்துள்ளது. இது அமெரிக்க மக்களின் பரிசு என்றும், இரு நாடுகளின் ஒற்றுமைக்கு இது பெருமளவில் உதவும் என்று தூதரகம் கூறியுள்ளது. தங்கள் நாட்டின் உள்விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று இதற்கு நேபாள அமைப்புகள் பதிலடி கொடுத்துள்ளன. நேபாளத்திற்கு எது தேவை என்பதை நாட்டு மக்கள் முடிவு செய்வார்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

பெப்ரவரி 20ந் திகதி நடந்த போராட்டத்தில் தலைநகர் காத்மண்டுவின் வீதிகள் நிறைந்து காணப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் அமெரிக்க எதிர்ப்பு முழக்கங்களுடன் போராட்ட ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசிக் கலைக்க காவல்துறையினர் முயற்சி செய்தனர். இதில் பலர் காயமடைந்தனர். நிலைமை பதற்றமாக இருக்கிறது என்றும், அதனால் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளும் நடப்பதாகவும் அரசுத்தரப்பு செய்திகள் கூறியிருந்தன.

நேபாள மக்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் பெப்ரவரி 27ந் திகதி கூடிய பாராளுமன்றம், அமெரிக்க நிதியுதவியை ஏற்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது, முதலாளித்துவ ஜனநாயக பாராளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், மக்களின் கோரிக்கைகளை நிராகரிக்கும் போது மக்களால் எதுவுமே செய்ய முடியாது என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

# ஈரானுக்கு கம்போடியாவும் அழைப்பு

**த**ங்கள் நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களைக் கண்டறியும் பணிகளை மேற்கொள்வதற்காக ஈரானுக்கு கம்போடியா அழைப்பு விடுத்திருக்கிறது.

அண்மையில் எண்ணெய் வளம் கண்டறிவது மற்றும் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்ய தொழிற்சாலைகளை அமைப்பது ஆகியவற்றிற்காக வெனிசுலாவும், ஈரானும் உடன்பாடுகளில் கையெழுத்திட்டன. அமெரிக்காவின் தடைகளை மீறி இந்த உடன்பாடுகள் உருவாகின. அமெரிக்காவின் எதிர்மறை நடவடிக்கைகளால் வெனிசுலா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு தடைகளை எதிர்கொள்ள உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உடன்பாடுகளை அடுத்து, ஈரான் தனது சர்வதேச அளவிலான வர்த்தக செயல்பாடுகளை அதிகரித்து வருகிறது. தென் கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவுடன் உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளது. அண்மையில் அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. கம்போடியாவில் உள்ள எண்ணெய் வளங்களை ஆய்வு செய்யுமாறு ஈரானின் தூதர் அலி அக்பர் நசாரியிடம் கம்போடிய அமைச்சர் சுய் செம் கோரிக்கை வைத்துள்ளார்.

ஏற்கனவே இருக்கும் எண்ணெய் வயல்களை மேம்படுத்தவும், புதிய வயல்களைக் கண்டறியவும் உதவுமாறு வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கம்போடிய பெட்ரோலியத்துறையின் செயல் இயக்குநர் சீப் சோர், 'மிகப்பெரும் அனுபவம் ஈரான் வசம் உள்ளது. தற்போதைய பேச்சுவார்த்தை முதல் கட்டத்தில் இருக்கிறது. ஆனால் இது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வளர்த்தெடுக்கும்' என்று தெரிவித்தார்.

எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாக உருவாக வேண்டும் என்று நீண்ட காலமாக கம்போடியா திட்டமிட்டு வருகிறது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ஈரானுடனான உறவு தங்கள் முயற்சிகளுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும் என்று கம்போடியா எதிர்பார்க்கிறது. மீண்டும் 3 இலட்சம் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தி என்ற நிலையை மீட்போம் என்றும், சுத்திகரிப்பு ஆலை ஈரான் உதவியோடு அமைக்கப்படும் என்று கம்போடியா தெரிவித்துள்ளது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

நாடுகளில் கனடாவும் ஒன்று.

எனவே, இன்றைய பொருளாதார நெருக்கடி என்பது உலகம் தழுவியது. அதில் இலங்கை போன்ற சிறிய – வறிய நாடுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்பதே உண்மையாகும். இலங்கையில் ராஜபக்சாக்கள் தலைமையிலான இன்றைய அரசாங்கம் பதவி வகிக்காது சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திசநாயக்க அல்லது சம்பந்தன் போன்றோரில் எவர் ஆட்சியிலிருந்தாலும் இந்த நிலைமையை மாற்றியமைத்திருக்க முடியாது. இதுவே யதார்த்தம். ஏனெனில், இவர்கள் எல்லோருமே முதலாளித்துவ முறையில்தான் ஆட்சியை நடத்துவார்கள்.

அதேநேரத்தில், இலங்கையில் இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு கொவிட் பெருந்தொற்றையும், ரஸ்ய – உக்ரேன் போரையும் காரணம் காட்டி, மக்களை அவர்களது இடுப்புப்பட்டியை இறுக்கிக் கொள்ளும்படி ஆலோசனை கூறித் தப்பித்து விடவும் முடியாது.

ஏனெனில், இலங்கையில் இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு ஏறத்தாழ பாதி காரணம், 1948 இல் நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த கட்சிகளே பிரதான காரணம். அவை மட்டுமின்றி, நாட்டைப் பொருளாதார ரீதியாக அழிவுக்குத் தள்ளியதில் இனவாத யுத்தத்தின் பங்காளிகளான தமிழ் இனவாத சக்திகளும், இரு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சி மேற்கொண்ட ஜே.வி.பி. இயக்கமும் கூட காரணகர்த்தாக்கள் என்பதை மறுத்துவிட முடியாது.

முக்கியமாக, நாட்டை ஆட்சி செய்தவர்கள் தூர நோக்குடனான பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செயல்படத் தவறியது பாரதூரமான குற்றமாகும். நாடு சுதந்திரம் பெற்ற பொழுது ஓரளவு தன்னிறைவைக் கொண்டிருந்த பொருளாதார நிலையை 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் 'திறந்த பொருளாதாரக் கொள்கை' என்ற நவ தாராளவாதக் கொள்கை முற்றிலுமாக நாசம் செய்தது. அப்பொழுதே வெளிநாடுகளில் கையேந்திச் சீவிக்கும் யுகம் ஆரம்பமாகிவிட்டது.

ஜே.ஆர். தனது நவ தாராளவாதக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்காக 1978 இல் கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரமுள்ள அரசியல் அமைப்பு முறை, 6 ஆவது திருத்தச் சட்டம், இனவாத அரசியல் முறை, பயங்கரவாத தடைச் சட்டம் என்பன இன்று வரை தொடர்கின்றன என்பதிலிருந்தே இதைப் புரிந்து கொள்ளலாம்.

ஜே.ஆரின் பின்னர் ஒரு குறுகிய காலமே அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தார். அவருக்குப் பின்னர் ஐ.தே.க. எதிர்ப்பாளர்களான சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோத்தபாய ராஜபக்ச என்போரே இன்றுவரை ஜனாதிபதிகளாக இருந்து வந்துள்ளனர், வருகின்றனர். ஆனால் இவர்கள் யாருமே ஜே.ஆரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட நவ தாராளவாதக் கொள்கையை மாற்றியமைக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக அவரது கொள்கையைத் தொடர்ந்ததுடன், இன்றைய நெருக்கடிக்கு ஒருவரையொருவர் குற்றம் சாட்டித் தப்பித்துக் கொள்ளும் முயற்சியிலும் இறங்கியிருக்கின்றனர்.

இவர்கள் நேர காலத்தோடேயே ஜே.ஆர். கொண்டு வந்த நவ தாராளவாதக் கொள்கையை மாற்றி, நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பைத் திட்டமிட்ட முறையில் செயல்படுத்தி, சுய சார்பு நிலைக்கு இட்டுச் சென்றிருந்தால், இன்று இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியில் (டொலர் பற்றாக்குறையில்) பாதியைத் தன்னும் குறைத்திருக்கலாம். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் 23 வருடங்கள் கழித்து சுதந்திரம் அடைந்த பங்களாதேஸ் நாட்டிடம் கையேந்தும் அவல நிலையைக் கூடத் தவிர்த்திருக்கலாம்.

இன்றைய உலக மயமாக்கல் சூழலில் எந்தவொரு நாடும் தனித்துச் செயப்பட முடியாது என்பது உண்மையே. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் செயல்படுவதற்கு வெளிநாட்டுக் கடன்களும், வெளிநாட்டு முதலீடுகளும் தேவையென்பதும் மறுக்க முடியாத உண்மையே. ஆனால் அந்தக் கடன்களும் முதலீடுகளும் ஒரு நாடு தன்னைச் சுய சார்பில் நிற்பதற்கு பயன்படுத்தப்பட்டாலே அவற்றால் நன்மையுண்டு. இதையே சீனா, வியட்நாம் போன்ற சோசலிச நாடுகள் மேற்கொள்கின்றன.

ஆனால், இலங்கை அதற்குப் பதிலாக எப்பொழுதும் வெளிநாட்டுக் கடன்களிலேயே தனது வாழ்க்கையை ஓட்டும் நாடாக இருந்து வந்துள்ளது. அதன் பின் விளைவே இன்றைய பாரிய பொருளாதார நெருக்கடியும் மக்களின் குமுறலுமாகும். இந்த நிலைமையை நீக்குவதற்கு இலங்கை இன்றாவது சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்தே ஆக வேண்டும்.

முதலாவதாக, இலங்கையின் பொருளாதாரத்தை சுய சார்புக்கு இட்டுச் செல்லக்கூடிய திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக் கொள்கையொன்றை வகுத்துச் செயல்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, தற்போதைய எதேச்சாதிகார, இனவாத அரசியல் அமைப்பு முறை மாற்றப்பட்டு, மக்களின் உண்மையான ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற, சகல இனங்கள் - மதங்களின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற, அரசியல் அமைப்பு முறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, சகல விதமான வெளிநாட்டு ஆதிக்கங்களையும் எதிர்த்து நிற்கின்ற அதே வேளையில், சகல நாடுகளுடனும் சமமாக நட்பைப் பேணுகின்ற, உண்மையான அணி சேராக் கொள்கையை நாடு பின்பற்ற வேண்டும்.

இவையே இலங்கையை தற்போதைய நெருக்கடியிலிருந்து காப்பாற்றக்கூடிய வழிமுறைகளாகும்.

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

மக்கள் மண்ணெண்ணெய்க்காகவும் மற்றும் எரிபொருட்களுக்காகவும் வரிசைகளில் தொடர்ந்து நின்று கொண்டிருப்பதை நான் அவதானித்துள்ளேன் என்றும், பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

சில பொருட்களின் விநியோகத்தில் தாமதங்கள் ஏற்பட்டாலும், பொருட்களின் தட்டுப்பாடுகளை முற்றாக நீக்குவதற்கு அமைச்சர்கள் துரிதமாக செயற்படுவார்கள் எனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# நேட்டோ உலகிற்கே ஆபத்து – பொலிவியா முன்னாள் ஜனாதிபதி எச்சரிக்கை




அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவக் கூட்டணி உலகிற்கே ஆபத்து என்றும், அது கலைக்கப்பட வேண்டும் என்றும் பொலிவியாவின் முன்னாள் ஜனாதிபதி இவோ மொரேல்ஸ் (Evo Morales) கோரியுள்ளார். உக்ரைனில் உள்ள நிலைமை குறித்துக் கருத்து தெரிவித்த அவர், உக்ரைனில் தற்போது நடந்து வரும் நிகழ்வுகளுக்கு நேட்டோ இராணுவக் கூட்டணியை விரிவு படுத்த வேண்டும் என்ற கொள்கையே காரணம் என்று கூறியுள்ள மொரேல்ஸ், ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையிலுள்ள பிரச்சனையின் துவக்கம் என்பது விரிவாக்கம் மற்றும் தலையீடு ஆகிய அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் கொள்கைகளால் ஏற்பட்டதாகும் என்று தெரிவித்துள்ளார்.

நேட்டோ பற்றிப் பேசிய அவர், "உலக அமைதிக்கு, உலகப் பாதுகாப்புக்கு நேட்டோ ஆபத்தானதாகும். அதை ஒழித்துக் கட்டவே நாங்கள் சமூக அமைப்புகளு டன் உடன்பாடுகளை எட்டிக் கொண்டிருக்கி றோம். இந்த உடன்பாடுகள் இலத்தீன் அமெரிக்காவில் மட்டுமல்ல, அனைத்துக் கண்டங்களிலும் உள்ள அமைப்புகளைத் தொடர்பு கொண்டு போடப்படுகின்றன. நேட்டோவுக்கு எதிராக எதுவும் செய்யா விட்டால், மனிதகுலத்திற்கு நிரந்தரமான ஆபத்தாக அது உருவாகிவிடும்" என்றார். மனித குலத்திற்கு எதிரான உக்ரைனின் நடவடிக்கைகளையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சொந்த நாட்டிலேயே 2014 ஆம் ஆண்டு முதல் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடந்துள்ளன. இது ரஷ்யாவுடனான மோதலுக்கு வழிவகுத்தது. உக்ரைனைக் கைப்பற்றுவதில் அமெரிக்காவும் மிக ஆர்வமாக இருக்கிறது.

ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் மற்றும் லிபியாவில் உள்ள இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்காக அமெரிக்கா, அந்த நாடுகளை எல்லாம் ஆக்கிரமித்ததைப் போன்றே, உக்ரைனையும் ஆக்கிரமித்து சுரண்ட விரும்புகிறது. அதோடு ரஷ்யாவை இராணுவ ரீதியாகச் சுற்றி வளைப்பதும் அமெரிக்காவின் நோக்கமாகும் என்று குற்றம் சாட்டுகிறார் மொரேல்ஸ். அமெரிக்காவின் நோக்கம் பற்றிக் குறிப்பிட்ட மொரேல்ஸ், "எப்போதுமே போர்களைத் தூண்டுவது அமெரிக்காவின் வழக்கமாகும். தனது ஆயுதங்களை விற்க, தலையீடுகள் செய்ய, இராணுவத் தளங்களை அமைக்க மற்றும் பிற நாடுகளின் இயற்கை வளங்களைச் சுரண்ட போன்ற காரணங்களுக்காக அமெரிக்கா இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது" என்று சுட்டிக்காட்டினார். நேட்டோ கலைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகளை இணைக்கும் பணியில் மொரேல்ஸ் ஈடுபட்டுள்ளார்.

# மனித உரிமைப் பாதுகாப்பில் முன்னிலை நாடாக கியூபா

50 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்கா ஏற்படுத்தியுள்ள தடைகளைத் தாண்டி மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் சாதனைகளைப் படைத்திருப்பதாக கியூபா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலின் 49வது கூட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. உலகின் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய நாடுகள் பாரபட்சம் பார்க்கின்றன என்று மூன்றாம் உலக நாடுகள் சொல்லி வந்த குற்றச்சாட்டுகள் தற்போதும் தொடர்ந்து கொண்டிருப்பதை இந்த விவாதத்தில் பார்க்க முடிகிறது. அறிவுரை சொல்லும் வளர்ந்த நாடுகள் தங்கள் மண்ணில் மனித உரிமை மீறல்களைக் கண்டு கொள்ளாமல் இருந்து வருகின்றன.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்று கியூபாவின் சார்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கான அந்நாட்டின் தூதுவர் ஜூவான் அன்டோனியோ குயின்டானில்லா (Juan Antonio Quintanilla), 'எங்கள் நாட்டின் மீது அமெரிக்கா தடைகளை விதித்து வருகிறது. இந்தத் தடைகள் விதிக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த பிறகும் எங்கள் மண்ணில் மனித உரிமைகள் பாதுகாப்பில் நாங்கள் சாதனை படைத்திருக்கிறோம். வெளிநாடுகளில் கியூபா பற்றி ஊடகங்கள் வழியாக பொய்களைப் பரப்பி வருகிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

கோவிட் –19 பெருந்தொற்றைக் கையாண்ட விதத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2 வயது முதல் 18 வயது வரையில் உள்ள அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியை முழுவதுமாக செலுத்திய முதல் நாடு கியூபா என்று குறிப்பிட்ட அவர், இந்தத் தடுப்பூசிகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை என்பதையும் பெருமையோடு தெரிவித்தார். வேறு எந்த நாடும் இத்தகைய நடவடிக்கையில் சாதிக்கவில்லை என்ற அவர், சொந்த நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்க வளர்ந்த நாடுகள் தவறி விட்டன என்று குற்றம் சாட்டினார்.

உலகில் இதுவரை எந்த நாடும் சந்திக்காத தடைகளை கியூபா சந்தித்து வருகிறது. இவ்வளவு ஆண்டு காலத்திற்கு எந்த நாட்டின் மீதும் தடைகள் விதிக்கப்பட்டதில்லை. இருப்பினும், நாட்டு மக்களைப் பாதுகாப்பதில், அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் எந்தவிதத் தயக்கத்தையும் கியூபா காட்டவில்லை என்று கூறிய குயின்டானில்லா, மனித உரிமைகள் குறித்து பொய்யான தகவல்களைப் பரப்பி, அதை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.